பக்கங்கள்:18 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 17 சனிக்கிழமை 01.01.2022 கதிர் 57

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல்தலைவர்களின்நேற்றைய கூட்டத்தில் ஆராயப்படும் விடயம் எதுவாக இருக்கும் என்று நேற்றுக் காலை வெளியான இப்பத்தியில் கோடி காட்டியிருந்தேன். Common Minimum Plan தயாரிப்பது பக்கம்02 »

### சம்பந்தன், சுமந்திரன், ஹக்கீம், மனோ, செல்வம், சித்தர் கூடி ஆராய்வு

# பொது இணக்க ஆவணம் தயாரிக்க தமிழ்ப் பேசும் தரப்புகள் உடன்பாடு

## விரைந்து முடிக்கத் திட்டம்

கொழும்பு, ஜனவரி 01

இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாஷைகள், எதிர்பார்ப்புகளை ஒன்றுபட்டுப் பிரதிபலிக்கும் பொது ஆவணம் ஒன்றை மேலும் காலம் தாழ்த்தாமல் விரைந்து தயாரித்து முடிப்பது என்ற இணக்கப்பாட்டுக்கு நேற்று மாலை கூடிய தமிழ்ப் பேசும் மக்களின் கட்சித் தலைவர்கள் வந்தனர். ☞13

## மன்னார் பிரதேச சபையின் பட்ஜட் மீண்டும் தோற்கடிப்பு



(ந.லோகதயாளன்)

மன்னார் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் 2 ஆவதுதடவையாகவும் நேற்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச ☞13

## அதிகாரத்தின் மீது அதீத பேராசை!

### சத்தியமூர்த்தியைப் போட்டுத் தாக்குகின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(ந.லோகதயாளன்)

வெளிநாடு சென்ற யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பொறுப்பையும் கொண்டு சென்றுவிட்டார் என அரச மருத்துவ ☞13

## எரிவாயு கசிவால் வீட்டில் தீப்பரவல்

வத்தளை - சாந்தி மாவத்தையில் உள்ள வீடொன்றில் நேற்று தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

எரிவாயு கசிவு காரணமாக குறித்த தீப்பரவல் ☞13

## பதில் பிரதமராக பஸில்?

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை பதில் பிரதமராக நியமிப்பது தொடர்பில் அரச தரப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்லவுள்ளார் எனவும், சிகிச்சைகளின் பின்னர் சுமார் ஒரு மாதம் வரை அவருக்குக் கட்டாய ஓய்வு தேவைப்படுவதாலும், பதில் பிரதமர் நியமனம் குறித்து கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு ஸ்ரீலங்கா ☞13



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்துப் பேசுவார்கள் என்று குறிப்பிட்டேன். அது பற்றிப் பேசினார்கள். ஆனால் வேறு சொல்லாடல் பயன்படுத்தத் தீர்மானித்தார்கள்.

அதற்குள் இறங்க முன்னர் ஒரு குட்டிக்கதை. கம்பகலாநிதி பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன் கொழும்பில் நடைபெற்ற ஒரு கம்பன் விழாவில் கூறிய கதை இது.

தஞ்சாவூர் வழியே ஒரு ரயில் சென்று கொண்டிருந்தது. இரு நண்பர்கள் பயணித்துக் கொண்டிருந்தனர். இரு மருகிலும் செழுமையான பச்சைப் பசேல் என்ற வயல். கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்திருந்தது. அதைப் பார்த்த ஒரு நண்பனுக்கு ஆசை பொத்துக் கொண்டு வந்தது.

“இந்த வயலில் ஒரு இரண்டு ஏக்கர் யாரும் எங்களுக்கு எழுதித் தந்தால் எப்படி இருக்கும்?” – என்றான். மற்றவன் பிடரியில் ஓர் அடி விட்டான்.

“அதுதான் இந்த வயலில் எதையும் யாரும் எங்களுக்குத் தரப்போவதில்லை. யாரும் தருவார்கள் என்று கற்பனை பண்ணினாலும் – கனவு கண்டாலும் – அதில் ஏண்டா கஞ்சத்தனம்? இரண்டு ஏக்கர் என்ன, இரண்டாயிரம் ஏக்கர் இருந்தால் எப்படி இருக்கும் என்று தாரளமாகக் கற்பனை பண்ணுவது தானே...?” – என்றானாம் மற்றவன்.

இனி விடயத்துக்கு வருவோம்.

நேற்று சம்பந்தன் வீட்டில் பேச்சு ஆரம்பமானது. சம்பந்தன், சுமந்திரன், செல்வம், சித்தார்த்தன், மனோ கணேசன், ஹக்கீம் ஆகியோர் பங்குபற்றினர். செல்வத்துடன் தொற்றிக்கொண்டு அவரின் பேச்சாளர் சுரேன் குருசுவாமியும் வந்திருந்தார். ஆனால் அது சம்பந்தனுக்குப் பிடிக்கவில்லை என்பதை உதவி வட்டாரம் மூலம் அறிந்தேன். அதற்கு வலுவான காரணங்கள் உண்டு. காலம் வரும்போது பிறிதொருதடவையில் விளக்குவேன்.

கூட்ட ஆரம்பத்திலேயே சம்பந்தன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் அதைக் கூறியபோது மற்றைய எல்லோரும் வாயடைத்துப் பேசாமல் இருந்தனர்.

“இப்படி ஓர் ஆவணம் தயாரிக்க வேண்டும் என்ற முயற்சி ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. இந்தச் சமயத்தில் இது ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது. யார் இதன் பின்னணி, நோக்கம், இலக்கு எதுவும் நான் அறியேன். அது குறித்தும் நான் சிரத்தைப் படவில்லை. ஆனால் நாங்கள் – தமிழ்ப் பேசும் மக்கள் – ஐக்கியப்பட்டு முன்னேற வேண்டும், ஒன்று பட்டு நிறக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். அதை நாங்கள் கட்டாயம் செய்ய வேண்டும். செய்வோம்.” – என்றார் சம்பந்தன்.

கூட்டம் ஆரம்பமான சமயமே Common Minimum Plan ஒன்று தயாரிப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்தப் பெயரைப் பயன்படுத்துவதை சுமந்திரன் ஆட்சேபித்தார்.

“நாங்கள் தயாரிப்பது ஒரு வேலைத்திட்டம் அல்ல. தமிழ்ப் பேசும் மக்களின் பொதுவான அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு பொது ஆவணம். அது ‘குறைந்த’ என்று அர்த்தம் தரும் ஆவணமாக இருக்க முடியாது. நாங்கள் உச்சமாகக் கேட்பதாகத்தான் அது இருக்க வேண்டும். உச்சத்தைக் கேட்டால்தான் ஓரளவாவது பெறலாம்.” – என்ற சாரப்பட சுமந்திரன் கூறிய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சரி. இனி, நான் முன்னர் குறிப்பிட்ட குட்டிக் கதையின் சாரத்தைக் கவனத்தில் எடுத்து விடயத்தை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

இந்தத் தமிழ்ப் பேசும் தரப்புகளின் கூட்டத்தின் பெறுபேறு குறித்துத் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்ட பிரபல இந்திய அரசியல் ஆய்வாளர் என்.சத்தியமூர்த்தி, ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

“ரெலோத்தலைவர்செல்வம்அடைக்கலநாதன் வகையறாக்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளலாம். எப்போதும் போல் அல்லாமல், அவர்கள் பிள்ளையார் பிடிக்கப் போய் அது பிள்ளையாராகவே உருவெடுத்துள்ளது...” – என்று சிலாகித்திருந்தார் அவர்.

அதில் ஒரு சிறு மாற்றம் தென்படுகின்றது – நேற்றைய கூட்டத்தின் பெறுபேறாக.

செல்வம் அண்ட் கம்பனி பிடிக்கப் புறப்பட்ட பிள்ளையார் குரங்காகி விடவில்லை என்பது உண்மைதான். ஆனால் இது பிள்ளையார் வடிவத்தில் இருந்து வேறு வடிவம் எடுத்திருப்பதுதான் புது ட்விஸ்ட்.

இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பும் நோக்கத்துடன் பொது ஆவணம் தயாரிப்பதுதான் ஒரிஜினத் திட்டம். அந்த நோக்கத்தில்தான் விவகாரத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டது ரெலோ.

ஆனால், இப்போது தமிழ்ப் பேசும் தரப்புகளின் பொது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஓர் ஆவணமாக – அறிவிப்பாக – அது உருவெடுக்கும் சாத்தியம் நேர்ந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

நேற்று சம்பந்தன் வீட்டில் கலந்துரையாடல் முடிந்து எல்லோர் சார்பிலும் ஊடகங்களைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தனது சொல்லாடல்களில் மிகக் கவனமாக – மிக அவதானமாக – இருந்தமையை வாசகர்கள் கருத்தில் கொள்ளலாம். பொது ஆவணம் தயாரிப்பது குறித்தே அவர் பிரஸ்தாபித்தார். பிரதமர் மோடிக்கு அனுப்பும் ஆவணம் என்று அவர் தப்பித் தவறிக் கூடக் குறிப்பிடவில்லை.

நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று முற்பகல் 11 மணிக்கு சுமந்திரனின் இல்லத்தில் கூடி, பொது ஆவண வரைவை – நேற்றிரவு நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் – ஒழுங்குபடுத்தி, இறுதி செய்ய முயற்சிப்பார்கள் என்று தெரிகின்றது.

அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் விவகாரமாக இல்லாமல், தமிழ்ப்பேசும்தரப்புகளுக்கு முக்கியமான அரசமைப்பு ஏற்பாடுகள் முழுவதையும் நடைமுறைப்படுத்தக் கோருதல், மாகாண சபைத் தேர்தலைக் காலம் பிந்தாமல் உடனடியாக நடத்தும்படி வற்புறுத்துதல் போன்ற பல விடயங்கள் இந்தப் பொது ஆவணத்தில் இடம் பெற வாய்ப்புகள் அதிகம் உண்டு.

வடக்கு, கிழக்கு தமிழர் தரப்பு 13ஆவது திருத்தம் குறித்துப் பேசுகின்றது. மலையகத் தரப்புகள் 16ஆவது திருத்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றன. அந்த 16ஆவது திருத்தத்தில்தான் தமிழ் அரச கரும மொழியாகப்

13




# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# வாடகைக்கு வீடு / கட்டடம் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு/ கட்டடம் தேவைப்படுகின்றது. கைதடி சித்தமருத்துவத் துறையை அண்மித்த பகுதிகளில் இலகுவாகச் சென்றடையக்கூடிய வகையில் உள்ளவாறு வீடு/ கட்டடம் தேவைப்படுகின்றது.

| இல. | விபரம் | தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| 01. | அறைகளின் இடவசதி | 20 – 30 மாணவர்களாவது தங்கக்கூடியவாறு அறைகள் இருத்தல் வேண்டும் |
| 02. | குளியல் அறைகள் | 03 – 08 |
| 03. | மலசலகூடங்கள் | 03 – 05 |
| 04. | சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பிட வசதி | மேற்குறித்த வகையில் போதுமான அளவு |
| 05. | தண்ணீர் வசதி | மேற்குறித்த வகையில் போதுமான அளவு |
| 06. | மின்சாரம் | தடங்கலின்றிய வழங்கல் |
| 07. | பொது இடம் | மாணவர்கள் கல்வி கற்பதற்கானது |

வீடு / கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை உதவிப் பதிவாளர் சித்தமருத்துவ அலகு அல்லது பொது நிர்வாகக் கிளையில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிரதிப் பதிவாளர்/பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 14.01.2022 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ’மாணவர்களின் உபயோகத்துக்கான வீடு, கட்டடம்’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். பல்கலைக்கழகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்:

பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகம் – 021 222 6517, 0766059563
உதவிப் பதிவாளர்/ சித்தமருத்துவ அலகு – 021 223 2629, 0772249935

பதிவாளர்









# ஆண்டு முழுதும் தேவ அன்னை பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை தொடங்குங்கள்!

## வழிப்படுத்துகின்றார் யாழ். ஆயர்

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் புதுவருட வாழ்த்து வருமாறு:-

2022ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள், ஏக்கங்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.



உலகக் கத்தோலிக்க திருச்சபையானது புதிய ஆண்டின் முதல் தினத்தை தேவ அன்னையின் தினமாகப் பிரகடனப்படுத்தி அன்றைய தினத்தில் ஆண்டுமுழுவதிற்குமான அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும் பெற வேண்டும்படி பணித்து நிற்கிறது.

நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக்கா1:38) என்று தேவ அன்னை இறைசித்தத்தை ஏற்று இறைவனின் தாயாகவும் இறை மக்களின் தாயாகவும் விளங்கி உலக மக்கள் அனைவரையும் பாதுகாத்துப் பாரமரித்து வருகிறாள்.

கடந்த ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும், பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு.

இப்புதிய ஆண்டு முழுவதும் தேவ அன்னை எம்மைப் பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை தொடங்குங்கள். ஆண்டு முழுவதிலும் தேவ அன்னையின் தாய்க்குரிய அன்பையும் பாசமிகு பராமரிப்பையும் இறை பாதுகாப்பையும வேண்டித் தினமும் மன்றாடுங்கள். தேவ தாயை எப்போதும், எங்கிருந்தாலும், என்ன நடந்தாலும், உங்கள் அன்னையாக மனதிலிருத்தி,என்ன செய்தாலும் அன்னையின் துணையுடன் செய்யுங்கள். அன்னை வெற்றியையே பெற்றுத் தருவாள்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து, எத்தீங்குமின்றி வழிநடத்தி, எம் அனைத்துத் தேவைகளிலும் நிறைவு செய்ய இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். - என்று உள்ளது.

# உருப்படி வருடம் இது இல்லை.!

மீண்டும் ஒரு புது வருடம்
பிறந்ததே 2022 ஆம் ஆண்டு இன்று
ஆண்டுகள்தான் கடக்கின்றன
ஆனதொன்றும் காணவில்லை

வேண்டி நின்றோம் பல வரும்
வேதனைகள் தீருமென்று..!
சோதனைதான் நாள் முழுதும்
துன்பமுடன் துயர்க்கதைகள்

வெந்தபுண்ணில் வேல்பாச்சும்
நொந்த மண்ணின் சோகங்கள்
மந்தகதி ஆட்சி இங்கே
பஞ்சம் பசி பட்டினிதான்

பொருள்கள் எல்லாம் விலை ஏற்றம்
போகத்தின் நெற்செய்கையும்
உரமின்றி உறங்கி கிடக்கிறது
ஊரெல்லாம் மகிழ்ச்சி இல்லை

உரிமைக்கும் வழிகள் இல்லை
உலகத்தில் நீதி கேட்டால்
ஊமைதான் பதில்கள் எல்லாம்
உறுதிகள் ஏதும் இல்லை

உழவனவனின் அடுப்பினிலும்
உணவுக்கும் நெருப்பும் இல்லை
உண்மையை சொல்லப்போனால்
உருப்படி வருடம் இது இல்லை



- அம்பிளாந்துறையூர் அரியம் -






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முடிவு எடுக்கும் வேளை இது!

புத்தாண்டு பிறந்துள்ளது. நெருக்கடியில் – குறிப்பாக பொருளாதார இக்கட்டில் – சிக்கி இருக்கும் இலங்கை தீர்மானகரமான சில முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அதுவும் இனியும் காலம் தாழ்ந்து விடாமல், புத்தாண்டின் ஆரம்பத்திலேயே அந்த முடிவுகளை இலங்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே காலம் பிந்தி விட்டது.

இன்றைய நெருக்கடி கட்டத்துக்கு முகம் கொடுக்க உடனடி சமாளிப்பு வேலைகளை அரசு முன்னெடுப்பது உண்மைதான். அங்கு, இங்கு என்று – வேண்டிய, தெரிந்த நாடுகளிடம் இருந்து – கடன் உதவிகளைப் பெற்று, தற்காலிக சமாளிப்பு நடக்கின்றது. குறிப்பாக இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனான நட்புறவு மூலமான உதவிகளைத் தற்காலிகமாக மூச்சுவிடுவதற்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றது கொழும்பு.

ஆனால், இது நிரந்தரத் தீர்வல்ல. தற்போது நாட்டின் கழுத்தை இறுக்கிப் பிடித்திருக்கும் பொருளாதார நெருக்குதலில் இருந்து நாடு மீளுவதாயின் இரண்டு வழிகள்தான் உள்ளன என்கின்றனர் பொருளியல் வல்லுநர்கள்.

ஒன்றில், இலங்கையின் நீண்ட கால மீட்சிக்கு நட்பு நாடுகள் – சக்திகள் – பெருமளவு உதவிகளை ஒன்றாக வழங்க முன்வர வேண்டும்.

இல்லையேல், சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி அடைந்து உதவி கோரவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்றைத் தீர்மானித்து, அதை நாடும் வழி வகைகளை தீவிரமாகவும், வேகமாகவும் முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாடு உள்ளது. இதில் இனி மேலும் காலதாமதம் செய்ய முடியாது. அவ்வளவு தூரத்துக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி உள்ளது.

இதுவரை சர்வதேச தரப்புகள், பொது நிலையினரிடமிருந்து பெற்ற படுகடனுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியாமல் போய், கடனிறுக்க வகையற்ற நாடு என்ற அவப்பெயர் சூழ்ந்து, நாடு மீள முடியாத சிக்கலில் மாட்டும் நெருக்கடி நெருங்கி வருகின்றது.

ஆகவே, இன்று புத்தாண்டு பிறந்த நிலையில், உடனடி தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டாயம் – அழுத்தம் – கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு.

இவ்விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாத இக்கட்டில் மாட்டியுள்ளது அரசு என்பதும் வாஸ்தவம்தான்.

இலங்கையை முழு அளவில் பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணை எடுக்கும் எந்த நட்பு நாடுமோ, சக்தியுமோ இப்போது இல்லை. அத்தகைய வெளியுறவு சார்ந்த தொடர்பாடலை – நட்புறவை – வெளிவிவகாரக் கொள்கையை – இலங்கை இதுவரை கைக்கொண்டிருக்கவுமில்லை. அணிசேராக் கொள்கை என்ற கோட்பாடு காரணமாக யாரையும் அதிகம் அவரணைக்கும் போக்கையும் கொழும்பு பின்பற்றியிருக்கவில்லை. இலங்கையின் அணிசேராக் கொள்கையை மதித்து, அதற்காக இலங்கைக்கு இத்துணை உதவி செய்ய எந்த நாடோ, நாடுகளின் கூட்டோ தயாரில்லை.

மறுபக்கத்தில், உதவிக்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவிக்காக அதனிடம் சரணாகதி அடையவும் கொழும்பு ஆட்சிப்பீடம் விரும்பவில்லை. பின்னடிக்கின்றது.

சர்வதேச நாணயத்திடம் உதவி கோரினால் நிச்சயம் அந்த உதவி கிடைக்கும். இலங்கை தன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள நாணய நிதியம் தோள் கொடுக்கும். ஆனால் பொருளாதாரக் கொள்கை, கோட்பாடுகள் தொடர்பில் நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அரசு கட்டுப்பட வேண்டியிருக்கும். அதில் ஆட்சியாளர்கள் அரசியல் செய்ய முடியாது.

இந்தச் சிக்கல் கருதி, நாணய நிதியத்திடம் சரணாகதி அடைவதைத் தள்ளித் தள்ளிப் போட்டு வருகின்றது அரசு. பிறந்துள்ள புத்தாண்டின் முதல் ஓரிரு வாரங்களில் இவ்விடயத்தில் அரசு முடிவு கட்ட வேண்டியிருக்கும். பெரும்பாலும் சரணாகதிதான் ஒரே வழியாக இருக்கும்.

# பிரதமர் தலைமையில் பௌத்த தகவல் அமைப்பு மக்கள் மயப்படுத்தப்பட்டது!



நாடளாவிய ரீதியிலுள்ள விகாரைகளின் தகவல்களை உள்ளடக்கிய தகவல் அமைப்பை மக்கள்மயப்படுத்தும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட இந்த தகவல்களை இணையத்தளத்தின் ஊடாக மக்கள் பெற்றுக் கொள்ளலாம்.

அரச நிறுவனங்களை டிஜிற்றல் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரின் ஆலோசனைக்கமைய இந்த டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தை மூன்று மொழிகளிலும் இணையத்தளத்தின் ஊடாக அறிமுகப்படுத்தும் பணியும் பிரதமரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் பௌத்த தகவல் அமைப்பு மக்கள்மயப்படுத்தப்பட்ட நிலையில், திணைக்களத்தின் பணிகளை எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதி முதல் தரவு தளத்தின் ஊடாக முன்னெடுக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் கீழ் விகாரைகளை பதிவுசெய்தல், விகாராதிபதி பதவிகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் விகாரைகளின் அபிவிருத்திக்காக நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வாய்ப்பளித்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

இந்த தரவு அமைப்பில் இதுவரை 13 ஆயிரத்து 972 விகாரைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையுடன், அந்தந்த மாவட்ட மட்டத்தில் அது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 13 ஆயிரத்து 972 விகாரைகளுக்குரிய வணக்கத்திற்குரிய தேரர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 846 ஆகும்.

மேலும், 10 ஆயிரத்து 417 அறநெறி பாடசாலைகள் மற்றும் ஒவ்வொரு அறநெறி பாடசாலையிலும் பணியாற்றும் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 381 ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களும் இந்த இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் மத்திய கலாசார நிதியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சமீபத்திய தகவல் அமைப்பும் இதன்போது பிரதமரால் இணையத்தில் வெளியிடப்பட்டது.

அதற்கமைய நீரில் மூழ்கிய 107 தொல்பொருள் தளங்களை இனங்கண்டு மேற்கொண்ட ஆய்வுத் தகவல்கள், மத்திய கலாசார நிதியத்தின் இணையதளத்தில் விரைவில் புதுப்பிக்கப்படும்.

நீரில் மூழ்கிய தொல்பொருள் தளங்களின் கீழ் 101 கப்பல்கள் மற்றும் ஆறு விமானங்கள் பற்றிய தகவல்கள் இவ்வாறு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளமையுடன், மேலும் அந்த நிகழ்வுகளின் வரலாறு, படங்கள் மற்றும் வீடியோக்கள் ஆகியவற்றை இணையத்தில் பதிவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாத்துறைக்கு பங்களிப்பு செய்து இந்த இடங்களை உள்ளூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலாத் தளங்களாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் சுனந்த காரியப் பெரும, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் தொல்பொருளியல் பேராசிரியர் காமினி ரணசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தீப்பற்றி எரிந்த வீட்டிலிருந்து இளம்பெண் உடல் கருகிய நிலையில் சடலமாக மீட்பு

## சகோதரி தப்பியோட்டம்

தீப்பற்றி எரிந்த வீட்டில் இருந்து இளம் பெண்ணின் உடல் கருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்து தாய் – தந்தை இருவரும் வீட்டில் இல்லாத நிலையில், சகோதரிகளான இருவர் மாத்திரம் இருந்த நிலையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீயை அணைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த நிலையில், வீட்டில் யாரேனும் உள்ளனரா? என்பது குறித்து ஆய்வு செய்துள்ளனர்.

இதன்போது, அங்குள்ள ஓர் அறையில் விஷ்மயா எனும் பெண் உடல் கருகிய நிலையில் சடலமாக கிடந்துள்ளார். அவரின் உடலை மீட்ட மீட்புக்குழுவினர் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். உடல் மிகவும் கருகிய நிலையில் இருந்ததால் உயிரிழந்தவர் விஷ்மயா என்பது டி.என்.ஏ. பரிசோதனை மூலமே உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, விஷ்மயாவின் இளைய சகோதரி தீ விபத்து ஏற்பட்ட சில நிமிடங்களில் வீட்டில் இருந்து வெளியேறி தலைமறைவாகியுள்ளார்.

இதன் மூலம், தனது சகோதரியான விஷ்மயாவை கொலை செய்து வீட்டுக்கு தீவைத்து விட்டு தப்பியோடியுள்ளாரா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம் வழமைக்குவர மூன்று வாரமாகுமாம்!

லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம் வழமைக்கு திரும்ப இன்னும் மூன்று வாரங்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் துஷார ஜயசிங்க இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சந்தைக்கான எரிவாயு விநியோகம் மற்றும் விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொற்றுக்கு மத்தியிலும் தேசிய பாதுகாப்பையும் சக வாழ்வையும் உறுதியாக நிலை நிறுத்தினோம்

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி பெருமிதம்



பிறக்கும் புத்தாண்டை ஒட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக் கப்பட்டிருப்பவை வருமாறு:-

மலர்ந்துள்ள புத்தாண்டு, எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் பார்க்கத் தூண்டியிருக்கிறது. அதனால், 2022ஆம் ஆண்டை , மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வரவேற்போம்.

நாட்டின் மீதும், எமது சமூகத்தின் மீதும் கடந்த ஆண்டு ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். எதிர்காலப் புத்தெழுச்சிக்காக நாம் உறுதியுடன் இருக்க வேண்டுமென்று நான் நினைக் கின்றேன்.

இந்தச் சவால்களைத் தொடர்வதற்கும், வெற்றிகொள் வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட

(12ஆம் பக்கம் பார்க்க)













# பரஸ்பரம் குற்றம் சாட்டுவதைவிடுத்து சரியானதை தேர்ந்து செயற்படுவோம்

## புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் தெரிவிப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அனைவரதும் நம்பிக்கைகளையும் பிரார்த்தனைகளையும் நிறைவேறச் செய்யும் 2022 புத்தாண்டு பிறந்துள்ளது. வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை அனுபவித்து, மிகுந்த வலிமையுடன் எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு உதயமாகியுள்ள இப்புத்தாண்டில் உறுதிகொள்வோம். உலகளாவிய தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து கடந்த ஆண்டில் இலங்கை எதிர்கொண்ட சவால்கள் பலவாகும்.

சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான சவால்களை வெற்றி கொள்வதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றிய அர்ப்பணிப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மக்களின் பாதுகாப்பிற்காகவே கடந்த ஆண்டில் முன்னுரிமை வழங்கியிருந்தோம். தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக செயற்படுத்தியதன் ஊடாக உங்கள் அன்பிற்குரியவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க எமக்கு முடிந்தது.

நாட்டில் இவ்வாறான எவ்வித சவால்களும் காணப்படாத காலப்பகுதியில் கைவிடப்பட்ட பல திட்டங்களை நாம் செயற்படுத்தி அவற்றை கடந்த காலங்களில் மக்களின் பயன்பாட்டிற்காக கையளித்துள்ளோம். தொற்று நிலைமைக்கு மத்தியிலும் அந்த எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் இடைநிறுத்தாது, மக்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்பி அபிவிருத்தி ஒளியை முழு நாட்டிற்கும் பரப்புவதே எமது அரசாங்கத்தின் எதிர்கால இலட்சியமாகும். அதற்காக சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக எம்மத்தியில் காணப்படும் பல்வேறு தடைகளை முறியடிக்க வேண்டும். ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதற்கு பதிலாக சரியானதை தெரிவுசெய்து அதற்காக செயற்படுவதன் ஊடாக தற்போது காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். நாம் நாட்டின் பிரச்சினைகளை விமர்சிப்பவர்கள் அல்லர், நடைமுறைச் சவால்களுக்கான தீர்வுகளை உங்களுக்கு வழங்குபவர்கள்.

அதற்காக, நீங்கள் அனைவரும் எதிர்பார்க்கும் புதிய பாதை இன்று உதயமாகும் புத்தாண்டில் வெளிப்படுத்தப்படும்.நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடைகளை முறியடித்து வாழ்வை வெல்லும் ஆண்டாக இப்புத்தாண்டை உருவாக்குவோம். அதற்கு ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு பலமாக விளங்குவதற்கு உறுதியாக அர்ப்பணிப்புடன் செயற்படும் என நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன். இப்புத்தாண்டில் இலங்கை மக்கள் அனைவரதும் புதிய எதிர்பார்ப்புகளும் பிரார்த்தனைகளும் நிறைவேற வாழ்த்துகிறேன். - என்று உள்ளது.



# பொருளாதார புரட்சி ஒன்றை புத்தாண்டில் ஏற்படுத்துவோம்

## அங்கஜன் எம்.பி. அழைப்பு

மலரும் புத்தாண்டு நாட்டு மக்களுக்கு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமையட்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் -

கடந்த வருடம் பல சவால்களைத் தாண்டி அவற்றை எல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு இன்று புதியதொரு ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறோம்.

கடந்த வருடம் பல படிப்பினைகளை எமக்குத் தந்திருந்தது. அந்தப் படிப்பினைகள் எல்லாவற்றையும் படிக்கற்களாக மாற்றி இவ்வருடத்தை வளமான ஆண்டாக மாற்ற வேண்டும்.

புதிய ஆண்டில் அனைவரும் ஒன்றுபட்டு, வளமான ஆரோக்கியமான நாட்டினைக் கட்டியெழுப்ப திடசங்கற்பம் கொள்வோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)






# நெருக்கடியிலிருந்து புத்தெழுச்சி பெறும் நம்பிக்கைப் புத்தாண்டாக இது மலரட்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வெற்றிகளைக் காட்டிலும் ஒரு நாடு என்ற வகையில் தோல்விகள் மற்றும் துன்பங்கள் பலவற்றையும் கடந்து, புது வருடமொன்று பிறக்கும் இவ்வேளையில் அனைத்து இலங்கையர்களுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனச்சாட்சிக்கு இணங்க மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதைத் தவிர, இன்றுவரை அழுத்தங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு ஒரு போலியான விசித்திர உலகத்தைக் காட்டி, வெற்று வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாவது இலங்கை மக்களை அவமானப்படுத்துவதாகவே அமையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சுமார் 15,000 குடிமக்கள் பலியாகிய கொரோனா பாதிப்புக்கு மத்தியில், புத்தாண்டின் முதல் நாளில் வழக்கம்போல் பால் பொங்கவோ, சமைக்கவோ, முடியாத அளவுக்கு பொருளாதாரம் வங்குரோத்தாகி விட்டது. எந்நேரமும் காஸ் சிலிண்டர் வெடிக்குமோ என்ற பயத்தில் இல்லத்தரசிகள் சமயலறைக்கு தயங்கித் தயங்கிச் செல்ல வேண்டிய நிலையில் -

நாடு தனது கடைசி இருப்பைக் கூட இழந்து புதிய ஆண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டில் பெரும் கடனை அடைக்க வேண்டிய சூழ்நிலையில், குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி, கல்வி கேள்விக்குறியாகி, இளைஞர்கள் வேலையிழந்து விரக்தியில் வாடும் சூழலில், பசியால் அழும், ஊட்டச்சத்து குறைந்த, நிறை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வரும் சூழலில் -

வருங்காலத்தைப் பற்றி விவசாயிகள் தமது பாழடைந்த வயல்களில் பெருமூச்சு விடும் வேளையில், தொழிலாளர் சமூகம் தனக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்ச சலுகைகளையும் இழந்து நிற்கும் இவ்வேளையில் நாம் புதிய ஆண்டை எதிர்கொள்கிறோம்.

அதிகாரத்தின் நிகழ்ச்சி நிரலை நம் கையில் வைத்துக்கொண்டு, இந்த நெருக்கடியான சூழலை எதிர்கொள்ள முடியாது, ஆனால் இந்த சீரழிந்த சூழ்நிலையிலிருந்து கூட்டு முயற்சியின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

தேசிய பேரழிவு ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் குறுகிய அதிகார வெறிக்குப் பதிலாக தூய்மையான மக்கள் சார்பு வேலைத்திட்டத்தில் இறங்குமாறு இந்த நாட்டின் பிரஜைகளின் தலைமுறை என்ற வகையில் மீண்டும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

உலகின் பல்வேறு நாடுகள் பல்வேறு பேரழிவுகளுக்கு முகம் கொடுத்து எவ்வாறு அந்தத் துன்பங்களில் இருந்து எழுந்து நிற்கின்றன என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

மேலும் இந்த நாட்டின் இரண்டு கோடியே இருபது லட்சத்துக்கும் அதிகமான மக்களின் மற்றும் எதிர்கால சந்ததியின் பெயரால் பொறுப்புடன் செயல்படுவதற்கான முழுமையான வாய்ப்பு வந்துள்ளது என்பதையும் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

இந்த துரதிர்ஷ்டவசமான காலத்தில் உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் புதிய சிந்தனையின் படிப்பினையை இயற்கையே அமைதியாக நமக்குக் கற்றுத் தந்துள்ளது. மேலும் இது பற்றி உறுதியாக சிந்தித்து புத்தாண்டை - ஒரு புதிய தொடக்க உணர்வை - அடைந்து கொள்ள எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையின் அனைத்து அன்புக்குரிய மக்களுக்கும் மீண்டும் ஒரு தேசமாக எழுச்சி பெறுவதற்கான உன்னத அபிலாஷைகளை அடைவதற்கான வலிமையும் தைரியமும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். - என்று உள்ளது.















# எமது மதி நுட்ப அரசியல் வழிமுறையை ஏற்று எமது மக்கள் எம்முடன் அணி திரள வேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் அழைப்பு



நாளைய பொழுதுகளின் நம்பிக்கை ஒளியோடு பிறந்திருக்கும் புத்தாண்டின் வரவாக புது மகிழ்வும் புது நிமிர்வும் அமையட்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்புற்ற வாழ்வின் மீதான விருப்பங்களே எல்லா மக்களினதும் நம்பிக்கை ஊற்று!

கனவுகள் மெய்ப்படும், காரியங்கள் கைகூடும், பழையன கழிந்து. புதியன புகுந்து கண்ணெதிரே நல்ல காட்சிகள் அரங்கேறும்! இவையே புத்தாண்டை கொண்டாடி மகிழும் மக்களின் எதிர்பார்ப்பு!

இன்று புதிதாய் பிறந்தோம் என சகல மக்களுடனும் நாமும் இணைந்து எண்ணத்தில் உறுதி கொண்டு புத்தாண்டை வரவேற்போம். அடுத்து வரும் தேர்தல் வெற்றியை குறி வைத்தே அங்குமிங்கும் அலைந்து பலரும் அடுத்த ஆண்டில் பிறந்து விடும் அரசியல் தீர்வென பொய்கள் நிறைந்தகதைகள் பலவும் பேசுவர்.

ஆனாலும், அடுத்து வரும் ஆண்டில் எமது மக்களின் கனவுகளில் முடிந்தளவு முன்னேற்றம் காணவே உழைப்போம் நாமெனஉறுதி கொண்டு உண்மையை மட்டும் பேசுகின்றோம்! புத்தாண்டின் புது மகிழ்வையும், புது நிமிர்வையும் எவரும் தாம்பாள தட்டில் ஏந்தி எமது மக்களுக்கு தாமாக கொண்டு வந்து தரப்போவதில்லை,

மாறாக, எமது மக்களே தமது கனவுகள் நோக்கிய வெற்றியின் பாதையை தம் கைகளில் எடுக்க வேண்டும். அனுபவம், ஆற்றல். ஆளுமை நிறைந்த அரசியல் தலைமைக்கு போதிய ஆணை வழங்கி, அரசியலுரிமை, அபிவிருத்தி, அன்றாட இடர் தீர்ப்பு, இவை மூன்றும் இணைந்த எமது மதி நுட்ப அரசியல் வழிமுறையை ஏற்று, எமது மக்கள் இன்னமும் அதிகமாக அணி திரண்டு வரவேண்டும்.

பிறக்கும் புத்தாண்டில் பழையன கழிதல் என்பது எமது மக்களை நீடித்த அவலங்களுக்குள் சிறை இருத்திய தவறான வழிமுறைகளையும் மறந்து போதல் அல்ல, இன்று வரை தொடரும், எதையும் எமது மக்களுக்கு பெற்றுத்தராத வெற்றுக்கூச்சல்களின் அனுபவங்களைஎமது மக்கள் கற்றுத்தெளிதலே புதியன புகுதல் ஆகும்.

அனுபவங்களின் கருப்பையில் இருந்து தான் புதிய வரலாறுகள் பிறப்பெடுக்கின்றன, ஆண்டு மலர்வில் தமிழர் வாழ்வு மீண்டு நிமிரட்டும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது போல் சகல மக்களும் சமவுரிமை பெற்று வாழட்டும்.

- இவ்வாறு புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா, சகல மக்களின் இல்லங்கள் தோறும் புத்தாண்டின் புது மகிழ்வும் புது நிமிர்வும் உருவாக தொடர்ந்தும் உழைப்போம். - எனவும் தெரிவித்துள்ளார்.

# புது நம்பிக்கை தர வரும் புத்தாண்டை வரவேற்போம்



கழிந்து போன வருடமான 2021 எமக்களித்த அல்லல்கள் சொல்லும் தரமன்று. கொரோனாப் பெருந்தொற்று ஒமிக்ரோன் வரை வளர்ந்தது மட்டுமல்லாது உலகையே மீண்டும் ஒரு அச்சறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது.

எம் நாட்டில் பாதுகாப்பற்ற சமையல் அறை, நுகர்வுப் பொருள்களின் கட்டுக்கடங்கா விலையேற்றம்,பற்றாக்குறை, பலத்த பொருள் தட்டுப்பாடு, இறக்குமதி நிறுத்தம், பயிர் செழிக்க உரமின்மை, துறைமுகத்திற்கு வந்துள்ள கொள்கலன்களை விடுவிக்க டொலர் இருப்பின்மை போன்ற பெருந்துயரங்கள் பிறக்கப்போகும் புத்தாண்டிலாவது இல்லாமல் போகுமா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் 2022ஆம் ஆண்டை எதிர்பார்த்துக்கிடக்கும் மக்களுக்கு புது நம்பிக்கைகளைத் தர வரவேற்கின்றோம்.

விரைவான கால ஓட்டத்தில் சந்திரன் புவியைச் சுற்ற ஒரு திங்களும், புவி சூரியனைச் சுற்ற அகவை ஒன்றும் கழிந்து புதுவருடம் 2022 ஆக மலர்கின்றது. இப் புதுவருடத்திலாவது மக்கள் கஷ்டங்கள் தீர்ந்து இயல்பு நிலை திரும்ப வேண்டுமென்பது எமது வேணவா. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவுறவும், உரியதான உரிமைகள் எமக்கு கிடைக்கவும், அயல்மொழியாரின் அச்சுறுத்தல்கள், நில அபகரிப்புக்கள் நீங்கி மக்கள் தம் பூமியில் நிம்மதியாகவும் தாம் விரும்பும் வாழ்க்கையை விருப்பொடு வாழவும் வழி ஏற்படுத்திக் கொடுக்கவரும் ஒரு நம்பிக்கையான ஆண்டாக ஒவ்வொருவரும் நினைத்து வரவேற்க தயாராவோம்.

மலரும் புதுவருடத்தில் நாட்டின் வளம் செழிக்கவும், நலம் பெருகவும் உணவுப் பயிர்கள் உச்சப்பலன் கொடுக்கவும், பஞ்சம் வரும், பஞ்சம் வரும் என விடுவிக்கப்படும் அச்சுறுத்தல்கள் அகன்று எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்கவும் வழி சமைப்பதாக இருக்க வேண்டுமென எம் அன்னை முத்துமாரி தேவியைப் பிரார்த்தித்து புத்தாண்டை அனைவரும் வரவேற்போமாக.

ஆனந்தப் புத்தாண்டே வருக!அனைவருக்கும் புது நம்பிக்கை தருக!!
சுபமஸ்து!சுகினோ பவந்து!

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் ஜே.பி.**
**(பிரதம குரு.வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் தர்மகர்த்தா, தென் புலோலியூர் புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம், இந்து மத குரு பீடாதிபதி)**









# ஒப்பற்ற புத்தாண்டாய் பிறக்கவேண்டும்!

உலகமெலாம் மகிழ்ச்சிதனை அள்ளித்தந்து
ஒப்பற்ற புத்தாண்டும் பிறக்கவேண்டும்
நிலமுழுதும் உயிர்களெலாம் துன்பம் நீங்கி
நிம்மதியும் பேரன்பும் கொள்ளவேண்டும்
வளமுடனே உயிரனைத்தும் வாழ்ந்து ஓங்க
வற்றாத மனஉறுதி வாய்க்கவேண்டும்
அலகதிலா விளையாட்டைக் கொண்ட அந்த
ஆண்டவனின் கருணையதும் சிறக்கவேண்டும்.

உணர்வுகளின் பகிர்வுக்கே மொழிகள் தோன்றி
உலகனைத்தும் ஒன்றுபடச் செய்ததம்மா!
தினவெடுத்த சிலரோ தம் மொழியே இந்த
திகழ் புவனம் அதில் உயர்வாம் என்றே ஓதி
வினைவிதைத்து பகை வளர்த்து வீணாய் மோதி
வேற்றுமைகள் வளர்க்கின்றார், வீணர் சொல்லும்
பனை அளவாம் பொய் தகர்த்துப் பாரில் நல்ல
பண்பதனால் உறவுதனைப் படரச்செய்வோம்.

ஆண்டெமக்குச் சித்திரையில் தான் பிறக்கும்
ஆனாலும் செயல் அனைத்தும் செய்வதாலே
பூண்டதொரு செயல் ஆண்டாய் இதனைக் கொண்டு
போற்றிடுவோம்! தவறில்லை! புனிதம் மேவும்
நீண்ட பெரும் கிரியையெலாம் தமிழர் ஆண்டில்
நினைந்தேதான் நேர்படவே செய்து உய்வோம்.
தாண்டுகிற புத்தாண்டின் தவற்றையெல்லாம்
தரணியதில் நீக்கிடுவோம் தலைமை கொள்வோம்.

அரசியலார் மனங்களிலே அறமே நின்று
அதனாலே மனிதகுலம் தழைத்தோங்கட்டும்
அறிவியலார் மனங்களிலே உண்மை நின்று
அதனாலே அறிவுலகில் நலமோங்கட்டும்
நெறிபிறழா அன்பதனை நெஞ்சமேற்று
நேர் நின்று சமயங்கள் நிமிர்தோங்கட்டும்
வறுமையெலாம் தொலைந்திடவே உழவர் தங்கள்
வற்றாத உழைப்பதனால் உலகோங்கட்டும்.

உலகில் உள உயிர்ப்பிறப்பு எல்லாம் எங்கள்
உறவெனவே மனம் நினைந்து போற்றி வாழும்
நலமிகுந்த நற்பண்பை புதிய ஆண்டில்
நாமெல்லாம் ஏற்றிடுவோம் நலங்கள் செய்வோம்.
விலங்குகளைப் பறவைதனைக் கூட அந்த
விளங்குபுகழ் கம்பனவன் உறவாய்க்காட்டி
தளம் முழுதும் உயர்ந்திடவே வழிகள் சொன்னான்.
தாள் பணிந்து அவன் வழியில் தரணிவெல்வோம்.

இயற்கைதனை நாம் போற்றி இனிது வாழ்ந்தால்
இயற்கையதும் நமைப் போற்றி ஏற்றம் செய்யும்
மயக்கமுறும் அறிவாலே உலகமெல்லாம்
மாண்டொழிய நாம் ஓங்கி நிற்போமாகில்
அயர்த்துலகு வாடிடவே 'நுண்மி' யெல்லாம்
அன்றாடம் உருமாறி நம்மை வாட்டும்
இயற்கையதன் பலமறிந்து பணிந்தே நாங்கள்
ஏற்றமுறும் வாழ்வதனை பெற்றுய்வோமே.



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -




# நல்லதொரு புத்தாண்டை நாடுகாண வேண்டிடுவோம்!

புத்தாண்டு என்றதும் புத்துணர்வு பிறந்துவிடும்
புறப்பட்டு பலவிடங்கள் போகவே மனமெண்ணும்
மொத்தமுள்ள உறவுகளைப் பார்த்திடவே ஆசைவரும்
முழுமையாய் அனுபவிக்க பெருவிருப்பம் எழுந்துவிடும்

எல்லோரும் எண்ணங்களை எத்தனையோ வைத்துள்ளார்
அத்தனையும் நிறைவேற்ற அமைந்திடுமா புத்தாண்டு
புற்றிருந்து புறப்பட்டு வருகின்ற ஈசல்கள்போல்
புதுப்பெயரில் வைரஸும் வந்தபடி இருக்கிறதே

சீனாவின் சீதனத்தால் சீரழிவு ஓயவில்லை
சிறகடித்து ஒமிக்ரோன் வட்டமிட்டுப் பறக்கிறது
ஆபிரிக்கா தந்தகொடை ஆட்டியிப்போ வைக்கிறது
அனைவருக்கும் புத்தாண்டில் இதுபரிசா யாயிருக்கு

ஒமிக்ரோன் அரசாட்சி இப்போது தொடங்கிருக்கு
உலகமெலாம் ஓலமிட ஒமிக்ரோன் வைத்திருக்கு
உலகசுகாதார மையமோ ஓடியோடித் திரிகையிலே
உலகிடையே புத்தாண்டு உயிர்த்துடிப்பாய் அமைந்திடுமா

வைரஸோ விதம்விதமாய் வடிவெடுத்து வருகிறது
வைத்தியமோ புதுமருந்தை கொடுத்தபடி இருக்கிறது
விஞ்ஞானம் தனைவருத்தி ஆராய்ச்சி செய்கிறது
விடமாட்டேன் எனவுரைத்து வைரஸும் எழுகிறது

வளர்ந்த நாடெல்லாமே விழிபிதுங்கி நிற்கிறது
வளர்நிலை நாடுகளோ வகையறியாத் திகைக்கிறது
வைரஸோ தன்பாட்டில் பயணத்தைத் தொடர்கிறது
வரவிருக்கும் புத்தாண்டு வெளிச்சத்தைத் தொட்டிடுமா

முடக்கநிலை போட்டால் முடங்கிவிடும் செயலனைத்தும்
முடக்கநிலை அகன்றால் முடங்கிவிடும் மக்கள்நலம்
அடக்கமுடன் இருக்கவென அரசுரைத்து நிற்கிறது
அடக்கமதை உடைப்பதற்கும் ஆர்வம்பலர் கொண்டுள்ளார்

விலைவாசி உயர்கிறது வீட்டுக்கஷ்டம் பெருகிறது
பலதொழில்கள் போகிறது பஞ்சமெட்டிப் பார்க்கிறது
நிலைதளர்ந்து பலநாடு நெருக்கடியில் தவிக்கிறது
நிலையுணரா நிலையினிலும் சிலநாடு சிரிக்கிறது

தொலைதூரம் என்பதே தொலைதூரம் ஆகிறது
தொலைவிருத்தல் நலமென்றும் மனமெண்ணி நிற்கிறது
வைரஸை மனமெண்ணி மகிழ்வோடி ஒழிகிறது
வரவிருக்கும் புத்தாண்டு மனப்பயத்தைப் போக்கிடுமா

பட்டங்கள் கொடுப்பதற்குப் பலரிப்போ வந்துள்ளார்
பட்டங்கள் பெறுவதற்குப் பலரிப்போ காத்துள்ளார்
மாநாடு நடத்துதற்கும் மாதிட்டம் வகுத்துள்ளார்
மாவெழுச்சி கொள்வதற்கு வைரஸும் பார்த்திருக்கு

திட்டமிட்டுத் திட்டமிட்டு திட்டமிடல் திகைத்திறது
நட்டமெலாம் குவிந்தபடி நாளுமே போகிறது
திட்டமிடும் மனமிப்போ புத்தாண்டைப் பார்க்கிறது
புத்தாண்டு புதுத்திட்டம் கொண்டெமக்கு வந்திடுமா

நலம்பெருக வேண்டுமென்று நாமிறையை வேண்டிடுவோம்
நாநிலத்தின் துயரகரகல நாளுமே வேண்டிடுவோம்
நவநவமாய் பெரிகிவரும் நோயகல வேண்டிடுவோம்
நல்லதொரு புத்தாண்டை நாடுகாண வேண்டிடுவோம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)



# கடின உழைப்பால் இடர்களை வெல்ல நாங்கள் திடசங்கற்பம் கொள்வோம்!

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் புதுவருட அழைப்பு



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தமது புது வருட வாழ்த்தில் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் வேகமாக கடக்கிறது. உலகம் நோய்களின் சீற்றத்தால் அல்லற்படுகிறது. விஞ்ஞாபனத்தின் விந்தைகள் ஆச்சரியத்தை தந்த போதிலும் இயற்கையை எவராலும் வெல்லமுடியவில்லை. இயற்கையே இறை சக்தி. இறைவனை அனைவரும் எம்மைக் காத்தருளுமாறு வழிபாடு செய்யுங்கள். இந்த இனிய பிறப்பை நல்லவண்ணம் காத்து எமக்கும், பிறர்க்கும் நன்மைகளைத் தேடுவோமாக. முகத்தை எவ்வளவோ அலங்கரித்த மனிதன் இன்று கண்ணுக்கு தெரியாத கிருமிக்கு அச்சப்பட்டு முகக்கவசம் அணியும் நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலை மாறவேண்டும். உலகம் முழுவதும் நாம் நிம்மதியாக வாழும் நிலை உருவாக வேண்டும். இதற்காக இன்றைய நாளில் நன்றாக பிராத்தனை செய்வோம்.

அழகான இலங்கைத் திருநாடு அறத்தை தொலைத்ததனால் அல்லல்களை அனுபவிக்கின்றது. தர்மம் பிழைக்கிறதோ அதன் பின் எல்லாம் பிழைத்துவிடும். இன்று எம் மண்ணில் போரில்லை. ஆனால் பொருளாதாரப் பலமிழந்து விட்டோம். நாளை என்னவாகுமோ என்று அச்சத்தோடு அனைவரும் வாழும் நிலை.

எம்மண்ணில் தர்மம் நிலைக்க வேண்டும். பஞ்சமின்றி அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். நீதியோடு அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும். இவ்வேண்டுகோளை இந்நாளில் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம்.

'கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்'எனக் இராமாயணம் கூறியது. இன்று இலங்கை கடன் தொல்லையில் கதிகலங்கி, அண்டை நாடுகளிடம் கையேந்திக் காத்திருக்கிறது. இது நாட்டுக்கு மட்டுமல்ல, நமக்கு எல்லோருக்கும் பாடமாக அமைந்துள்ளது. நாடு நல்லாய் இருந்தால்தான் நாம் எல்லோரும் நன்றாக இருக்க முடியும். நாட்டுக்காக அனைவரும் பிரார்த்திப்போம். ஆடம்பரமான, அர்த்தமற்ற காரியங்களை நிறுத்துவோம். கடின உழைப்பினால் எம்மை நோக்கிவரும் இடர்களை வெல்வோம்.

அன்பான உறவுகளே! கடந்து சென்ற ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நினைந்து கடவுளிடம் மன்னிப்பு கேட்போம். புதிய ஆண்டில் புதிய சிந்தனையோடு புதுமைகள் செய்யப் புறப்படுவோம். காலம் மிகவும் பெறுமதியானது. உயிருக்கு சமமானது. எனவே புதிய ஆண்டில் அனைவரும் நல்ல திட்டமிடல்களோடு நல்லவண்ணம் வாழ முற்படுவோம்.

பிறரைக் குறை கூறுவதைவிடுத்து நாம் என்ன செய்தோம் என நமக்குள்ளே கேள்வி எழுப்பி சாதிக்கத் தயாராவோம்.

புதிய ஆண்டில் அனைவரும் சகல வளங்களோடும் சிறப்பாக வாழத் துர்க்கை அம்மனைப் பிரார்த்தித்து. அனைவருக்கும் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். – என்று உள்ளது.

# தர்மத்துக்காய் இரங்கி, இறங்கி, நிமிர்ந்து வா!

உலகம் என்றுமில்லாதவாறு கண்ணீரால் நிரம்பி உடைப்பெடுக்க ஆரம்பித்துள்ளது.

இனம், மதம், மொழி, நிறம், நிலம், வனம், வறுமை, வாழ்வு, வீடு, உரிமை, வாடகை, உரம், உணவு, கடன், அறாவட்டி, ஆட்சிபறிப்பு, சிசுக்கொலை, கருக்கலைப்பு, மூடநம்பிக்கைகள், அடாவடி, அட்டகாசம், பலாத்காரம், போதை, கடத்தல், கொலை, கொள்ளை , களவு அபகரிப்பு , மது, மாது, விபச்சாரம், வாகனம் விபத்து, காணாமல் ஆக்கப்பட்டோர், காணாமல் ஆக்கப்படுவோர், ஆன்மீக ஆண்மீக, அரசியல் துஷ்பிரயோகங்கள், யுத்தம், அணு ஆயுதம், அதிகாரத் தண்டனைகள் ஆகிய காரண காரியங்களால் தினம் தினம், கணம் கணம் மக்கள் உலகில் வாழ்விழந்து, மனமுடைந்து, வருமானம் இழந்து, சுமார் இருநூறு கோடி மக்கள் கண்ணீர்க் கடலில் தத்தளித்த வண்ணம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நூறு கோடி மக்கள் சொத்துச் சுகபோகங்களில் கண்கடை தெரியாமல் உல்லாச வாழ்வில் மிதக்கின்றார்கள். இருநூறு கோடி மக்கள், தாங்கள் வாழ்ந்தால் போதும், உயிரோடு இருப்பதே மேல் என்றுஎண்ணி வானம் பார்த்த பூமியாக வாழ்கிறார்கள். மிகுதியாக உள்ளோரில் நூறுகோடி சிறுவர்கள் கற்பனையோடு அடிமைகளாக வாழ்கிறார்கள். ஏனையோர் முதியவர்களும், நோயாளிகளும் ஆவர்.

இந்நிலையில் வறுமையின் விளிம்பில் இலங்கை தடுமாற ஆரம்பித்து விட்டது. ஆட்சியில் மாட்சியோ தென்படவில்லை. உரிமைகள் இன்னுமே பேறாக்கப்படவில்லை, மாறாகப் போராக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமைகள் யாவுமே தெரிந்து, புரிந்து, இரங்கி தீர்ப்பதற்காய் இறங்கி நிமிர்ந்து பிறந்து வா 90,000 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஏற்ற வரமோடு மகிழ்விக்க வா!!!

கொரோனா அச்சுறுத்தல் இன்னுமே தீராத நிலையில், குசினிகள் தோறும் காஸ் எரிவாயு அடுப்புகளும் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

மரக்கறி தொடக்கம் சகல அத்தியாவசியப் பொருள்கள் யாவும் கழுத்தை இறுக்கியுள்ளன.

வாழ்வா, சாவா என்ற தோரணையில் மக்கள் தடம் புரண்டு உழல்கின்றார்கள், வீதிகள் தோறும் விதிகளே ஆட்சி செய்கின்றன.

நாளாந்தம் சராசரியாக பத்து மனித உயிர்கள் அகால மரணங்களில் காவு கொள்ளப்படுகின்றன.

ஏழு லட்சம் வழக்குகள் தீர்ப்புகளுக்காகத் தவமிருக்கின்றன.

அடிமட்டத் தட்டுக்களில் வாழ்கின்ற மக்களைப் பற்றி ஆன்மீகமும், அரசியலும் சிந்திக்கவோ பிராத்திக்கவோ வரமாக்கவோ முடியாத நிலைமை மலையகம் வரை தொடர்கிறது. இந்நிலையில் புத்தாண்டே நீயோ பிறக்கின்றாய் . பாரிய தொரு மாற்றத்திற்காய் எழுந்து வா!

- கலாபூஷணம் கே. எஸ்.சிவஞானராஜா -

# புது வருடமும் நம் பயணமும்!

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்
நல்லோர்கள் நம் நாட்டில் தழைத்திட வேண்டும்
ஆண்டொன்று புதிதாகக் கண்டோம்
அதனூடே நாமும் நம் வாழ்வும்
திட்டமிட்ட சிறப்பு மிக்க செல்வம் உள்ள
சீரான வளங்களுடன் வாழ்ந்திட
உழைப்பும் ஊக்கமும் உயர்வும் அமைதியும்
நிம்மதியும் நிறைந்திட்ட
வாழ்வு எனும் பயணத்தை
நேர்மை எனும் துடுப்பு கொண்டு
நேர்வழியில் அமைத்திடுவோம்
ஒவ்வொரு ஆண்டும் ஆண்டவன் கொடுப்பதே
ஆண்டு அனுபவிக்க ஆனந்தமாய் வாழ

நல்லவையே ஞாலம் எல்லாம் நடந்திட
எள்ளளவும் குறைவின்றி
எண்ணம் எல்லாம் நிறைவேறி
அன்பு என்ற நலம் சேர்த்து
அனைவரும் இணைந்திருக்க
ஆண்டவன் அருளுகின்ற வரம் மிக்க வருடமாம்
இந்தப் புது வருடமாகும்

இன்னல் ஏதும் இன்றி
இன்பம் எங்கும் தோன்றி
இதயம் எல்லாம் நிறைந்திருப்போம்
இறைவன் புகழ் பாடி நிற்போம்
இதுவல்லோ வருடம் என்று
வியப்படைந்து வாழ்ந்திடுவோம்
வியத்தகு நல்லாண்டாய்
வியக்க வைத்து வாழ்ந்திடுவோம்

பாத்திமா மலர்

காலைக்கதிர் Kalaikkathir

# நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை இருவரதும் கற்றல் - கற்பித்தல் திறன்களின் வரலாற்று வழி

**தமிழ்ப் பெரியார் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களது 121 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். அதையொட்டி இன்று இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

தன்னிலோ, பிறரிலோ தங்கியிராது மாணவன் தானாகக் கற்றுயருமாறு செய்கின்றவன் எவனோ, அவன்தான் உண்மையான ஆசிரியன் என்பது நாவலரதும், சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களதும் கற்றல் - கற்பித்தல் வரலாற்று நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன.

கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த புத்தியும்கூட வரா என்பது முதுமொழி. மீனைக் கொடுப்பதை விட மீனைப் பிடிக்கும் முறையினைச் சொல்லிக் கொடுப்பது தான் சிறந்ததென்று சீனக் கல்விச் சிந்தனை கூறுவதும் நோக்குதற்குரியது.

கற்பதற்கு மாணவனுக்குச் சிரத்தை வேண்டுமென்று உபநிடதம் கூறுகின்றது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் நீண்டகாலம் எங்கிருந்து கற்றுப் புலமையாளரானார் என்பதும் பலரறியாதது. அறையைச் சிறையாக்கி, மனதை ஒருமுகப்படுத்திக் கற்றால் உயர்ந்து நிற்கலாம் என்பதும் உண்மை. இவ்வாறான வினைத்திறனும் விளைதிறனும் மிக்க கற்றல் - கற்பித்தல் திறன் அடிப்படைகள் நாவலரிலும் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களிலும் செல்வாக்குச் செலுத்தியமை தெரிகிறது.

1822ஆம் ஆண்டு நாவலர் பிறந்தார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் சி.வை.தா. பிறக்கிறார். இருவரும் இலங்கையிலும் தமிழகத்திலும் செல்வாக்குச்செலுத்தியவர்கள். தமிழ்நாட்டிலே வள்ளலார் தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்டோர் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டங்கள் கூடப் பெற்றுவிட்டனர் எனவும் இலங்கையிலே அவ்வாறில்லை என்றும் எனது பேராசான் ஒருவர் மனந்திறந்து சொல்லியுள்ளார். தமிழ்நாட்டிலே சி.வை.தாமோதரம்பிள்ளைக்கு



உரிய கௌரவம் வழங்கப்படவில்லை என்று வேதனைப்பட்டு, செவ்விலக்கிய மீட்பர் சி.வை.தாமோதரம்பிள்ளை (2006) எனும் தலைப்பிலே நாற்பத்தைந்து நூல்களை அடிப்படையாகக் கொண்டு மு.முனீஸ்மூர்த்தி ஓர் அரிய ஆராய்ச்சி நூலினை எழுதியிருக்கிறார். மேற்குறிப்பிட்ட சிந்தனைத் தெறிப்பின் விளைவாகவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

பொதுவாகக் கற்றல் - கற்பித்தல் முறைகளை முறைசார் கல்வி (Formal Education) என்றும் முறை



## ஒரு சுருக்கக் குறிப்பு

சாராக் கல்வி (Non Formal Education) என்றும் முறையில்கல்வி (Informal Education) என்றும் வகைப்படுத்துவர்.

பாடசாலைக்கல்வி முறைசார் கல்வியிலும், திண்ணைப்பள்ளிக் கல்வி முறைசாராக் கல்வியிலும் அடங்கும். வாழ்க்கைதான் கல்வி, அனுபவம் தான் கல்வி என்றவாறானவை முறையில் கல்வியிலே அடங்கும்.

இம்மூன்று முறைமைகளும் நாவலரதும் தாமோதரம்பிள்ளையினதும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலே செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. சுருக்கமாகக் கூறினால் மரபு சார்ந்த புலமைத்துவக் கல்வி முறையினையும், நவீன நிறுவனம் சார் கல்வி முறையினையும் பெற்றுத் தமது அபரிமிதமான சுயகற்றல் முயற்சி மூலம் இருவரும் கற்றுயர்ந்து கல்வித் தொண்டாற்றுகின்றனர். ஒருவனுக்கு அவனது தந்தை, தாய் தான் முதற்குரு என்பர். தந்தையோடு கல்வி போம், தாயோடு அறுசுவை போம் என்பர். பசு தன் கன்றுக் குட்டிக்கு ஒளிவுமறைவு இன்றிப் பால் கொடுப்பது போல பெற்றோர்கள் தம் பிள்ளைகட்கு அறிவைப் புகட்டுவர். இவர்களுக்கடுத்த நிலையில் ஆசிரியர் குறிப்பிடப்படுகிறார்.

இழிகுண இயல்பும், அழுக்காறு, அவா, வஞ்சம், அச்சமாடுதல் முதலான இயல்புகளையுடைய எதிர்மறையான ஆசிரியர்களைப் (Anti - teachers) பற்றியும் நல்லாசிரியர் இலக்கணம் பற்றியும் நன்னூல் எனும் இலக்கண நூலிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாவலர் அவர்கட்கும் சி.வை.தா. அவர்கட்கும் அவரவரின் தந்தையர் தான் முதற்குரு.

கற்றலிலே மரபுக்கூறுகளும் (Genes)அதிகம் செல்வாக்குச் செலுத்துமென்று உளவியலாளர் கூறுவர். நாவலரின் பாட்டனாராகிய இலங்கை காவல முதலியார், பாட்டனாராகிய பரமானந்தர், தந்தையாகிய கந்தப்பிள்ளை ஆகியோர் தமிழில் புலமை மிக்கவர்களாக விளங்கியமையுடன் அரச உத்தியோகமும் பார்த்தவர்கள். நாவலரின் தந்தையார் ஒரு வைத்தியர், தமிழ் வைத்திய நூல்கள் பலவற்றின் ஆசிரியர், நாடகாசிரியர். நாவலரின் மூத்த சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர்கள். இவ்வாறானதொரு கல்வித் தகைமையும், புலமையுமுடையோர் மத்தியிலிருந்து வந்தவர்தான் நாவலர்.

இவர் தமது ஆரம்பக் கல்வியினை நல்லூர் சுப்பிரமணிய உபாத்திரியாரிடத்தும் பின்னர் வேலாயுத முதலியாரிடத்தும் கற்றார். இவர்களிடம் நிகண்டு, வாக்குண்டாம், மூதுரை, நன்னெறி, பாரதம், கந்தபுராணம் போன்றவற்றைக் கற்றார். பீற்றர் பேர்சிவல் அவர்களின் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் அவரிடம் ஆங்கிலம் கற்கும் காலத்திலேதான் தமிழ்க் கல்வியை மேலும் அதிகமாகக் கற்பதற்காக இருபாலைச் சேனாதிராய முதலியாரிடத்திலும் சரவணமுத்துப் புலவரிடத்திலும் சென்று கற்று பெரும் புலமை பெற்றார். தகுதியான ஆசிரியர்கள் கல்வி புகட்டுவதற்குக் கருவியாக இருந்தாலும் நாவலர் தாமாக முயன்று கற்றதுதான் அதிகம் என்று தெரிகிறது.

ஏனைய மாணவர்க்குப் பாடம் சொல்வது போலவே நாவலருக்கும் பாடங்கள் போதிக்கப்பட்டு வந்தன. ஆனால் அவருடைய கல்விப் பசிக்கு இப் போதனைகள் சிறிதளவேனும் போதியதாயிருக்கவில்லை என்பதை ஆசிரியர்கள் வெகுவிரைவில் உணர்ந்து கொண்டார்கள். அதனால் ஏனையோர்க்கு ஒரு மாதத்திற்குரிய பாடங்களை, நாவலருக்கு ஒரு நாள் பாடம் என்ற அளவிலே தினமும் அளித்து வந்தார்கள். வைகறையில் நான்கு மணிக்கு நாவலர் துயிலெழுந்து விடுவார். காலைக் கடன்களையும், சமய அனுட்டானங்களையும் முடித்துக் கொண்டு அவர் படிக்கத் தொடங்கி விடுவார். உணவு நேரம் தவிர்ந்த ஏனைய பொழுதெல்லாம் நாவலர்க்குப் படிப்பிலேயே கழியும்(ஆறுமுகநாவலர், 1972:பக்5 - 6.) என்று சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் எழுதியிருப்பதும், கேட்ட செய்யுள்களின் பொருளைத் தம் மனத்திற் சிந்தித்தல், மனனம் பண்ணுதல் மாத்திரத்தினில்லாது, தம்மோடு கூடக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் அவற்றை விளங்கப்படுத்துவார். விளங்காத பிள்ளைகளுக்கு பின்னரும் அவர்கள் அவற்றை விளங்கிக் கொள்ளும் வகையில் விளங்கப்படுத்தினார். (வே. கனகரத்தின உபாத்தியாரின் ஆறுமுகநாவலர் சரித்திரம்,1994:பக்5 - 6.) என்று வே.கனகரத்தின உபாத்தியார் கூறியதும் நோக்குதற்குரியது.

1834ஆம் ஆண்டு யாழ் மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை, (யாழ் .மத்திய கல்லூரி) ஆரம்பிக்கப்பட்ட போது வண. பீற்றர் பேர்சிவல் (1803 - 1882) அவர்களே அதன் முதல்வர். இவரது பாடசாலையில் இவரிடம் நாவலர் கற்றபோது நாவலரின் திறமையை அவதானித்த பாதிரியார் இவரைத் தமது பாடசாலையின் கீழ்வகுப்புகளுக்கு ஆங்கிலத்தையும் மேல் வகுப்புகளுக்குத் தமிழையும் கற்பிக்குமாறு நியமித்

- கௌ.சித்தாந்தன் -

தார். இப்படியாகக்கற்று வந்துதான் நாவலர் பாதிரியாருக்குத் தமிழ்ஆசான் ஆனார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுவதுபோலநாவலருக்கும் பார்சிவல் துரைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு - மன ஒருமைப்பாடு - ஒரு சைவனுக்கும் சைவனுக்கும், கிறிஸ்தவனுக்கும் கிறிஸ்தவனுக்கும் இருந்ததில்லை. (ஆறுமுகநாவலர், 1979, ப.27.) என்பது 100வீதம் உண்மை.

முறைசார் கற்றல் - கற்பித்தலில் நாவலருக்கு பேர்சிவல் பாதிரியார் ஆசிரியர் ஆனதும், முறைசாராக் கல்வி முறைமூலம் பேர்சிவல் பாதிரியாருக்கு நாவலர் ஆசிரியரானதுமான சரித்திரம் இதுதான். பின்னர் நாவலர் பைபிளை மொழிபெயர்த்து, தொடர்ந்து கற்று சைவத் தமிழ்த்தொண்டு புரிந்து இலங்கையின் முதற் சமய குரவராகிறார். லட்சம் ஸ்ரீகளைப் பெற்று ஸ்ரீலஸ்ரீயும் ஆகிறார்.

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் தந்தையார் சிறுப்பிட்டி குருநாதர் வயிரவநாதர், தாயார் ஏழாலை மயில்வாகனம் அவர்களின் புத்திரி பெருந்தேவி. தாமோதரம்பிள்ளையின் தந்தை போதகர். தாமோதரனுக்குத் தந்தையாரே எழுத்தறிவித்த இறைவன் என்றும், தாயார் கதைகள் கூறிக் கல்வியை விருத்தி செய்தார் என்றும் நா. முத்தையா (ஏழாலை,2003, ப.19.) எழுதுகிறார்.

தந்தையார்க்கு அடுத்ததாக ஏழாலையில் மேன்மை பெற்றிருந்த நீலயனார் பள்ளி எனும் திண்ணைப்பள்ளிதான் தாமோதரனாருக்கு இளமையிலே தமிழ் இலக்கண, இலக்கியங்களை கற்பதற்கான அடிப்படை நிறுவனமாக அமைந்ததென்ற உண்மை பலரறியாதது. இரு கவிராயர்கள் என்று பண்டிதமணியவர்கள், இருபாலை சேனாதிராய முதலியாரையும் சுன்னாகம் முத்துக்குமார் கவிராயரையும் குறிப்பிடுவார். பின்னவரிடம் தாமோதரம்பிள்ளை பேரிலக்கண இலக்கியங்களை ஏழாலையிலிருந்து அவரது வீடு தேடிச்சென்று கற்றார்.

இதேவேளை தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலே அடிப்படை ஆங்கிலத்தைக் கற்றுத் தமது பன்னிரண்டாவது வயதிலே வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரிக்குச் சென்று அக் கல்லூரியிலே நெவின்ஸ், வித்துவான் கதிரைவேற்பிள்ளை, கறல் விஸ்வநாதபிள்ளை ஆகியோரிடமும் கற்றார். நாவலர் போன்றே இவரும் சுயமாகக் கற்றுத் தேர்ந்ததுதான் அதிகம் என்று தெரிகிறது. இவரின் தமிழ்ப் புலமை கோப்பாய் போதனா பாடசாலையில் ஆசிரியராவதற்கு உதவிற்று. இங்கே அவர் தொடர்ந்து பணியாற்றவில்லை. இவரின் எழுத்துத் திறனால் பீற்றர் பேர்சிவல் அவர்கள் ஆசிரியராக இருந்த சென்னை தினவர்த்தமானி பத்திரிகைக்கு ஆசிரியரானார். இதன் பின் சிலகாலத்தில் சென்னை இராசதானிக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதரானார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# காணிகளை அபகரிக்கும் தனிப்பட்ட நபர்கள் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் குற்றச்சாட்டு

சட்டத்துக்கு முரணாக காணிகளை அபகரித்து வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் போது அவர்களே எதிரான விஷமத்தனமான கருத்துக்களை பரப்பி வருகின்றனர் என மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.றஞ்சனா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் காணி உத்தியோகத்தர்களுக்கு எதிராக குறிப்பிட்ட சிலரால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மைக்காலமாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் காணி முகாமைத்துவத்துக்கு எதிராக விஷமத்தனமான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இதில் எந்தவிதமான உண்மை தன்மைகளும் இல்லை. இது தொடர்பில் பிரதேச செயலகத்துடன் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இது தெடர்பில் அறிந்து கொள்ள முடியும்.

அளவுக்கதிகமான காணிகளை அபகரித்து வைத்திருக்கும் தனிப்பட்டவர்களின் காணிப்பிணக்குகள் தொடர்பில் பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் நிலையில் அவர்களே இவ்வாறான விஷமத் தனமான கருத்துக்களைப் பரப்பி வருகின் றார்கள்.

வெளிப்படுத்தல் உறுதிகள் மூலம் பெருந்தொகையான காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள் மற்றும் பொருத்தமற்ற முறையிலே காணி ஆவணங்களை பெற்றுள்ளவர்கள் இவ்வாறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பிலும் ஆலோசித்து வருகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

# நூலகர் நினைவுப் பேருரையும் அரும் பொருள்கள் கையளிப்பும்!





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினர். சிரேஷ்ட உதவி நூலகர் சி. கேதீஸ்வரன் 'இணையவழி கூட்டுறவுப் பட்டியலாக்கம் - பொதுநூலகங்களுக்கான சாதகநிலைமைகள்" என்னும் தலைப்பில் நினைவுரையாற்றினார்.

அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் தன்னார்வத்தோடு தனிப்பட சேகரித்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களும், ஏராளமான தமிழரின் தொன்மை சார் மரபுரிமை அரும் பொருள்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்துக்குக் கையளிக்கப்பட்டன. குடும்பத்தினரால் கையளிக்கப்பட்ட பொருள்களை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதில் நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இதற்கான உடன்படிக்கையில் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தரும், குடும்பத்தினர் சார்பில் அவரது துணைவரும் கைச்சாத்திட்டனர்.

நிகழ்வில் பல்கலைக்கழக நூலக ஆளணியினர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# தொற்றுக்கு .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தொற்றுப் பரவல் காரணமாக முடங்கியுள்ள பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன இதன் மூலம் பாதுகாக்கப்படும். அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் செயற்படுத்த எம்மால் முடியும். தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே அவ்வாறான எழுச்சியை நோக்கிப் பயணிக்க முடியும். வெற்றிகொண்ட சவால்களைப் போன்றே, பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இப்புத்தாண்டில் நம்மை ஊக்குவிக்கும்.

உலகளாவிய தொற்றுப் பரவலானது, பொதுமக்களின் அபிலாஷைகளை அடைவதற்கான முன்னேற்றத்தை மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. இவ்வாறான நிலைமையிலும், தேசிய பாதுகாப்பு மற்றும் சகவாழ்வு என்பன நிலைநாட்டப்பட்டுள்ளன. பல புதிய சீர்த்திருத்தங்கள் உருவாக்கப்படுகின்றன. செயலற்றிருந்த அரச மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தவும், அவற்றைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுசெல்லவும் தற்போதைய அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக இலங்கை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்டிருந்த பாதக நிலைமைகளைச் சீர்செய்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், உலகளாவிய ரீதியில் பாராட்டுகளைப் பெற்றிருக்கின்றன. தொற்றுப் பரவலுக்கு மத்தியில் நீங்கள் தற்போது அனுபவித்து வரும் சுதந்திரம், இந்நாட்டு மக்களின் மகத்தான தியாகத்தின் பிரதிபலனாகும் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

மக்களைப் பாதிப்படையச் செய்யும் அடிப்படையற்ற அரசியல் போராட்டங்கள், நாட்டை நேசிக்கின்ற பெரும்பான்மையான மக்களால் நிராகரிக்கப்பட்டு உள்ளமையானது, அரசாங்கத்தின் மீது அம்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்துள்ளது.

கடந்த காலம் முதல் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்ற இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொண்டே புதிய வெளிநாட்டுத் தொடர்புகளையும் கட்டியெழுப்பக் கிடைத்துள்ளமையானது, எமக்குக் கிடைத்த தனித்துவமான முதலீடாகவே நான் பார்க்கிறேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டை, மக்களுக்கான சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணித்து, மாற்றத்துடன் கூடிய புத்தாண்டாக மாற்ற அணிதிரளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு, உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் தைரியமிக்கதுமான புத்தாண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். - என்று உள்ளது.

# நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை .....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலே சுயமாகக் கற்று சென்னைப் பல்கலைக்கழகம் முதன்முதல் நடாத்திய B.A. பரீட்சையிலே தோற்றி முதல்வகுப்பில் சித்தி பெற்றார். சட்டம் படிக்கவும் ஆசையுற்று அப்பரீட்சையிலும் சித்திபெற்று B.L.பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார். அதன் பின்பு புதுக்கோட்டை நீதிபதியாக பல்லாண்டுகள் பணியாற்றினார். நாவலர் அவர்களைப் போலவே கற்றல் - கற்பித்தல் பணியின் பயனாக இலக்கண, இலக்கியப் பதிப்புப் பணியிலும் நூலாக்கப் பணியிலும் ஈடுபட்டார். சென்னைப் பல்கலைக்கழகப் பல்லாண்டுகள் பணியாற்றினார். கற்றல் - கற்பித்தல் பணியின் மேன்மையினை அனுபவபூர்வமாக உணர்ந்து நாவலர் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் பாடசாலை அமைத்துப் பணியாற்றியமை கண்டு விருப்புற்றுத் தமது ஏழாலையில் ஒரு சைவப் பாடசாலையினை ஆரம்பித்து 22 ஆண்டுகள் (1876 - 1898) நடத்தினார்.

இப் பாடசாலைக்கு நாவலரும் பரீட்சகராகச் சென்று அறிக்கை சமர்ப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலை மூடப்பட்ட பின்னர் அதனை மீளக்கட்டி எழுப்பி நடத்தாமல் கைவிட்டமை குறையென்றே தெரிகிறது. தாமோதரம்பிள்ளை அவர்களது 122 ஆவது சிரார்த்ததின காலத்திலாவது அது பற்றி ஊரவர் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

# பொருளாதார புரட்சி .......

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

2022ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வையும், நிலையான வளர்ச்சியையும் கொடுக்கும் அபிவிருத்திக்கான ஆண்டாக அமையும் என நம்புகிறேன். இவ் ஆண்டில் பொருளாதார புரட்சி ஒன்றினை நாட்டில் ஏற்படுத்த அனைவரும் இத் தருணத்தில் உறுதிகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் பொருளாதார ரீதியாக தம்மை வளப்படுத்த வேண்டும். நாட்டு மக்களின் மனச் சுமை,பொருளாதாரச் சுமைகள் அனைத்தும் குறைந்து மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் இவ்வாண்டில் ஈடேறும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன். செழிப்பான, மகிழ்ச்சிகரமான ஆண்டாக இவ்வாண்டு அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். - என்றுள்ளது.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சசிகா லேணர்ஸ்
Reg.No:DS882
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
கிளை நிறுவனங்கள் :-
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
web:- sasikalearners.com
email:-
sasikadrivingschool@gmail.com



| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையில் 'ஒமிக்ரோன்' மேலும் 41 பேருக்கு உறுதி!

## சந்திம ஜீவந்தர அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜன. 01

இலங்கையில் கொரோனாவின் புதிய திரிவு வைரஸான ஒமிக்ரோன் தொற்றுடன் மேலும் 41 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தனது கீச்சகத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வக சோதனைகளில் 41 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவால் பதுளையில் ஒரே நாளில் அறுவர் மரணம்!

கொரோனா வைரஸ் தொற்றால் பதுளை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பண்டாரவளையில் இருவர், வெலிமடையில் இருவர், ஹப்புத்தளையில் ஒருவர், பசறையில் ஒருவர் என்ற வகையில் அறுவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணங்களுடன் பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இதுவரை 560 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று பதுளை மாவட்ட கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

### மன்னார் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டக் கூட்டம் நேற்று மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஹாஜிர் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளரின் தலைமை உரையைத் தொடர்ந்து பிரதேச சபையின் செயலாளரால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கையை வாசிக்க முற்பட்டபோது வரவு - செலவுத் திட்ட அறிக்கையை தாங்கள் எதிர்ப்பதாக மன்னார் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பிரேரணையை சபையில் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முன்மொழிந்து வழி மொழிந்தனர்.

இதேவேளை, இந்த வரவு- செலவுத் திட்டத்தை தாங்கள் ஆதரிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் முன்மொழிய அதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து சபையின் தவிசாளரினால் வரவு செலவுத் திட்டம் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த தலா ஒரு உறுப்பினர்களுமாக மொத்தம் 11 உறுப்பினர்கள் 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் தலா ஒருவர் வீதம் 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 10 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதற்கமைய இந்த வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கு வித்தியாசத்தில் 2 ஆவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

### பதில் பிரதமராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன முன்னணியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமை கொண்டவர். எனவே, அவருக்கு பதில் பிரதமர் பதவியை வழங்குவதில் உள்ள சட்டரீதியிலான சிக்கல்கள் குறித்தும், அரசியல் ரீதியில் எழும் எதிர்ப்புகள் பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

### இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரயோகப்படுத்துவது பற்றிய உறுதியான ஏற்பாடுகள் உண்டு.

அதேபோல, மலையகத் தோட்டங்களில் இந்திய வம்சாவளியினருக்கு லயன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அதற்கான உரித்து –உறுதி – அவர்கள் பெயருக்கு வழங்கப்படுவதில்லை. நில உரித்தை அவர்களுக்கு வழங்குவது குறித்து அரசுத் தரப்பில் பெரும் பின்னடிப்புக் காணப்படுகின்றது.

இதேபோல கிழக்கிலும் பிற இடங்களிலும் முஸ்லிம் மக்களுக்கும் பல பிரச்சினைகள் உண்டு.

அவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொது ஆவணம் ஒன்றை தயாரித்து வெளியிடுவது என்ற ஓர் இணக்க நிலை நேற்று எட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

நான் குறிப்பிட்டமை போல இந்தியப் பிரதமருக்கு முன் வைக்கும் பொதுக் கோரிக்கையாக – வேண்டுகோளாக – அல்லாமல், பொதுப் பிரகடன ஆவணமாக அதை மாற்றும் விடயத்தில் இன்னும் பல படிகள் முன்னேற வேண்டியிருக்கின்றது.

இது விடயத்தில், நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமசந்திரன், சிறிகாந்தா ஆகியோரின் கட்சிகளின் இணக்கத்தையும் பெறவேண்டும் என்று சித்தார்த்தன் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக் காட்டியமையும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிள்ளையார் பிடிக்கப்போய் அது முருகனான கதையாகத்தான் விடயம் முடியும் போல தென்படுகின்றது.

★ ★ ★

வன்னியில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தனது கட்சி நடவடிக்கைகளை நிலை நிறுத்த முடியாது நொண்டுகின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி. அதுக்கு மற்றுமொரு set back.

அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், இளைஞரணிப் பிரமுகரும், தமிழரசுப் பாரம்பரியக் குடும்பத்தில் வந்தருமான இளம் பிரமுகர் ஒருவர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொய்யான ஆவணங்கள் மூலம் பணரீதியான நன்மை பெற்றார் என்று குற்றச்சாட்டு.

கணவன் – மனைவி முரண்பாட்டை ஒட்டி பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற பொலிஸார், இப்போது புதிய விடயங்களை அவிழ்த்து விட்டிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை தானோ தெரியவில்லை.

– மின்னல் –

### அதிகாரத்தின் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலைக் கிளை குற்றம் சாட்டியுள்ளது.

அந்தக் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலையானது வட மாகாணத்தின் தலையாயதும் பிரதானதுமான வைத்தியசாலை என்பதுடன் வட மாகாணத்திலிருந்து வைத்தியர்களை உருவாக்கும் போதனா வைத்தியசாலையும் ஆகும். அந்தவகையில் அதன் நிர்வாகம் என்பது எப்போதும் சீரியதாகவும் பொறுப்புத்தன்மை வாய்ந்ததாகவும் அமைவது முக்கியம். ஆயினும், அதன் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தியின் நடவடிக்கை எமக்கு அதிருப்தியை அளிப்பதாக உள்ளது. தனது மேற்படிப்புக்காக ஐக்கிய இராச்சியம் செல்வதற்கு முன்னர் தனது பணிகளை பதில் பணிப்பாளரிடம் ஒப்படைத்து விட்டு சென்றிருக்க வேண்டும் அல்லது யார் பதில் பணிப்பாளராக கடமையேற்பது என்பது தொடர்பில் சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக வைத்தியசாலைக்குத் தெரியப்படுத்தி இருக்க வேண்டும்.

முதல் முறை வெளிநாடு சென்றபோது தனது கடமைகளை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சிறீபவானந்தராஜாவிடம் ஒப்படைத்து சென்றிருந்தார். மருத்துவர் சிறீபவானந்தராஜாவும் பணிப்பாளர் பதவியில் மிக திறம்பட பணியாற்றி கொரோனா மிக தீவிரமாக இருந்த காலப்பகுதியில் வைத்தியசாலை நிர்வாகத்தை செவ்வனே வழிநடத்தியிருந்தார். ஆயினும் இம்முறை வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி எவ்வித பொறுப்பும் இன்றி முறையாக எந்தப் பொறுப்பு ஒப்படைப்பும் இன்றி வெளிநாடு புறப்பட்டு சென்றிருக்கிறார். அத்துடன் அங்கிருந்து வைத்திய நிபுணர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் தான் வெளிநாடு வந்து விட்டால் கூட அங்கிருந்து வைத்தியசாலை நிர்வாகத்தை மேற்கொள்வதாகவும், விண்ணப்பங்கள் கோரல்கள் என்பவற்றைத் தன்னைத் தொடர்பு கொண்டு செயற்படுமாறும் கூறியிருக்கின்றார்.

இவரது இந்தச் செயற்பாடானது இலங்கையின் ஸ்தாபன விதிக்கோட்பாடுகளை மீறுவதாகவும், மருத்துவப் பட்டப்பின் படிப்புக் கல்லூரியின் நியதிகளை மீறுவதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டிலிருந்து தான் வைத்தியசாலையை இயக்கப்போவது எனக் கூறியிருப்பது அதிகாரத்தின் மீது இவருக்கு உள்ள அதீத பேராசையைக் காட்டுவதுடன் சட்ட விதிகளை மீறி தனது அதிகார ஆக்கிரமிப்பை செய்ய விழையும், பிறரை உரிய பணிகளை செய்ய விடாது குழப்பும் இவரது ஏகபோக மன நிலையைக் காட்டுவதாக அமைகின்றது.

இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்தி குட்டையில் மீன்பிடிப்பதாக அமைந்துள்ளது. பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ஜமுனானந்தாவின் அத்துமீறல்கள், அவரது தலையீடுகளால் வைத்தியசாலையின் வழமையான நடவடிக்கைகள் பாதியளவு குழப்பப்பட்டுள்ளன. அந்தவகையில் அவரது குழப்ப நிர்வாகத்தின் உச்சக்கட்டமாக யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவானது முற்றாக ஸ்தம்பித்துப் போயுள்ளது.

விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் (A&E) தொடர்ச்சியாக வைத்தியர் பற்றாக்குறை நிலவும் நிலையிலும் அப்பிரிவின் வைத்தியர்கள் திறம்பட தமது சேவையை வழங்கி வந்துள்ளனர். ஆயினும், அவர்கள் தமது சேவையை தொடர்வதற்கு வைத்தியர்களை தந்து உதவுமாறு நிர்வாகத்தையும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.கிளையையும் பல முறை கடிதங்கள் மூலம் வேண்டியிருந்த நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பகீரதப் பிரயத்தனத்தின் பயனாக அவர்களுக்கு உள்ளகப் பயிற்சியை முடித்த வைத்தியர்களில் நால்வரை தருவதாக பதப்பாளர் சத்தியமூர்த்தி உறுதியளித்து விட்டு அதனை நிறைவேற்றாது காலம் கடத்திவிட்டு வெளி நாடு சென்று விட்ட நிலையில் மருத்துவர் ஜமுனானந்தா இதில் தலையிட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு வைத்தியரை மட்டும் வழங்கியுள்ளார்.

இதனால் A&E பிரிவில் வைத்தியர்கள் தமது சேவையைத் தொடர முடியாத நிலையில் வெள்ளிக்கிழமை சேவை நிலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இந்த நிலையை அப்பிரிவின் வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் மருத்துவர் ஜமுனானந்தாவுக்குத் தெரியப்படுத்தியும் அவர் பொறுப்பற்ற பதில்களைக் கூறியதுடன் வைத்தியர்களை A&E க்கு வழங்க பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றார். A&E சிகிச்சை பிரிவானது வட பிராந்தியத்தின் ஒரே அவசர விபத்து சேவையை வழங்கி வரும் பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒரு வைத்தியசாலைக்கு என்ன தேவை மக்களுக்கு என்ன தேவை என்பதை அறியாத ஒருவர் கையில் வைத்தியசாலை நிர்வாகம் சென்றுள்ளது என்பது விசனத்துக்குரியது. அத்துடன் வைத்தியர் சத்தியமூர்த்தி உரிய முறையில் பணிக்கையளிப்பை உரியவருக்கு வழங்காமல் சென்றதும் பிரதான காரணமாகவுள்ளது.

ஆகவே, யாழ் போதனா வைத்தியசாலையின் சேவைகளில் பிரதான பொறுப்புக்கூறும் அங்கமான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலைக் கிளையான நாம் இது தொடர்பில் எமது தாய்ச் சங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அதன் தொடர்ச்சியாக கொழும்பு மருத்துவப்பட்ட பின் படிப்பு கல்லூரிக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் வைத்தியர் சத்தியமூர்த்தியின் ஸ்தாபன விதி மற்றும் பட்டப் பின்படிப்பு கல்லூரி விதிகளுக்கு முரணான முறையில் செயற்படுவது பற்றியும் அவர் மீது ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் எமது தாய்ச் சங்கமானது வேண்டுகோள் விடுத்துள்ளது - என்றுள்ளது.

### எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்டுள்ளது எனத் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

இதனால் வீடு முழுவதும் சேதமடைந்துள்ளதுடன், தீப்பரவலைக் கட்டுப்படுத்த 2 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டன.

இந்தத் தீப்பரவலால் எந்தவொரு உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### பொது இணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் அவரின் தலைமையில் நேற்று மாலை 6 மணி முதல் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றிய ரவூப் ஹக்கீம் (முஸ்லிம் காங்கிரஸ்), மனோ கணேசன் (தமிழ் முற்போக்குக் கூட்டணி), எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசு), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் இந்த முடிவை எடுத்தனர்.

இந்தக் கூட்டத்தின் தீர்மானங்கள் குறித்து சுமந்திரன் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

ஐக்கியமாக நாங்கள் தொடர்ந்து செயற்பட வேண்டும் என்பதில் நம் அனைவருக்கும் இடையில் ஒத்த நிலைப்பாடு இருந்தது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. நாம் ஒன்றுபட்டு செயற்படுவது முக்கியம் என எல்லோரும் வலியுறுத்தினர்.

எல்லாத் தரப்பினருக்கும் இருக்கும் கரிசனைகளைக் கருத்தில் எடுத்து, இந்த ஆவணத் தயாரிப்பை வெகுவிரைவில் ஓர் இணக்கப்பாட்டுடன் நாம் முடிவுக்குக் கொண்டு வந்து, அதை வெளிப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சம்பந்தன் ஐயா தலைமையில் ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், செல்வம், சித்தார்த்தன், நான் ஆகிய அறுவரும் சுமார் இரண்டு மணி நேரம் இவ்விடயங்களை விரிவாகப் பேசினோம்.

இது தொடர்பில் காலம் கடந்தாமல் துரிதமாகச் செயற்படுவதற்காக நாளை (இன்று) காலை 11 மணிக்கு எனது இல்லத்தில் உள்ள எமது அலுவலகத்தில் எங்களில் சிலர் திரும்பவும் கூடி இந்த ஆவணத்தை இறுதி செய்யும் செயற்பாட்டை முன்னெடுக்கத் தீர்மானித்துளோம் - என்றார் சுமந்திரன். (உ)

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**




**1. கேள்வி:-** இலங்கை, இந்திய ஒப்பந்தத்தால் வந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை நம் தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்திக் கடிதம் எழுதுவதில் ஏன் இவ்வளவு இழுபறி நடக்கிறது?

**பதில் :-** இனப்பிரச்சினைத் தீர்வில் இந்த ஒப்பந்தம் பற்றி நம் தலைவர்கள் மத்தியில் மூன்று வகையான கருத்துக்கள் நிலவுகின்றன.

∗ முதலாம் வகையினர் இந்த ஒப்பந்தம் முழுமையுமே தவறு என்கிறார்கள்.

∗ இரண்டாம் வகையினர் இந்த ஒப்பந்தம் பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்பப்படியாய் மட்டுமே அமையத்தக்கது என்கிறார்கள்.

∗ மூன்றாவது வகையினர் இந்த ஒப்பந்தமே திருப்தியானது என்கிறார்கள்.

மேற்சொன்ன முதலாம் வகையினர், கூட்டாட்சிக்குள் சுயாட்சி என்பதையே ஏற்க மறுக்கிறார்கள். இவர்கள், இந்தியாவை முற்றாக நிராகரிக்கும் கருத்துடையவர்களாய்த் தெரிகிறார்கள். அதே நேரத்தில் தம் நோக்கத்தை நிறைவேற்றத் தாம் என்ன வழி வைத்திருக்கிறார்கள் என்பதையும் இன்று வரை இவர்கள் சொன்னபாடாய் இல்லை. இவர்களை யதார்த்தம் அறியாத கற்பனைவாதிகள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்களது கொள்கை, உண்மை உணராத மக்களை உசுப்பேற்ற மட்டுமே உதவும் என்று நினைக்கிறேன்.

இரண்டாம் வகையினர் இந்தியாவோடு முரண்பட விரும்பாமலும், தம் உண்மை நோக்கத்தைக் கைவிட விரும்பாமலும் இருப்பவர்கள். இவர்களை யதார்த்தம் உணர்ந்த இலட்சியவாதிகள் எனலாம்.



இவர்களும் கூடத் தீர்வு பற்றிய ஒரு தீர்க்கமான முடிவுக்கு இன்றுவரை வரவில்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

மூன்றாம் வகையினர் இந்தியாவை அப்படியே வழிமொழிந்து தீர்வு காண நினைப்பவர்கள். நடந்து முடிந்த இழப்புகளுக்கேற்ப இத்தீர்வு முழுமைப் பயன் தருமா? எனும் கேள்வி பற்றி இவர்கள் அதிக அக்கறை கொள்வதில்லை. இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியமானது இதுவேதான் என்பது இவர்தம் வாதமாய் இருக்கிறது. இவர்கள் ஓரளவு மக்கள் உணர்ச்சியிலிருந்து வேறுபட்டு நிற்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். இவர்களும் யதார்த்தவாதிகளாகவே கருதப்படத் தக்கவர்கள்தான். ஆனாலும் இவர்களை இலட்சியவாதிகளாய் உரைக்க முடியாது.

நடைமுறையில் இம் மூன்று குழுவினரது முடிவுகளில் எது சரிவரப் போகிறது என்பது இவர்களின் கையில் இல்லை என்பதுதான் இங்கு முக்கியமான விடயம். பிராந்திய முக்கியத்துவத்தால் வல்லரசுகளின் கையில் மாட்டியிருக்கும் இலங்கையில் இந்த மூன்றில் எதுவேண்டுமானாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பாதையாய் அமையலாம். அதனைக் காலம்தான் நிர்ணயிக்கப் போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ என்னதான் நடக்கும் நடக்கட்டுமே…!**

**2. கேள்வி:-** சென்றமுறை கேள்வி - பதில் பகுதியில் உலகநாதர், தனது குறிப்பொன்றில் இறந்தது ‘தழீஇய எச்ச உம்மை’ என்று ஏதோ ஒன்றைப் போட்டுத் தனக்கும் கொஞ்சம் இலக்கணம் தெரியும் என்று பீற்றிக்கொண்டிருக்கிறார். அது என்ன என்று எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. உங்களுக்கு விளங்கினால் கொஞ்சம் சொல்லுங்களேன்?

**பதில் :-** நமது மொழி, மிக ஆழமாய்ச் சிந்தித்து அமைக்கப்பட்ட ஒன்று. நாம் பேசும் வசனங்களில் வரும் ஒரு எழுத்துக்கூட அந்த வசனத்தின் தன்மையை நமக்குப் பலவிதமாய் உணர்த்திவிடும் என்கிறார்கள். அத்தகைய எழுத்துக்களில் ஒன்றாக, நமது தமிழ் எழுத்துக்களின் மகர வரிசையில் வரும் ‘ம்’ என்னும் மெய்யெழுத்து இருக்கிறதாம். ஒரு வசனத்தில் இவ் எழுத்துப் பொருந்துகிற பொழுது அவ்வெழுத்தின் தன்மை கொண்டு அந்த வசனம் வேறு, வேறு அர்த்தங்களை உண்டாக்கும் என்று இலக்கண நூல்கள் சொல்கின்றனவாம். உதாரணத்திற்குச் சிலவற்றைச் சொல்கிறேன்.

இந்த உணவை நாய் சாப்பிடாது என்று சொன்னால், நாய்க்கு அந்த உணவு ஒவ்வாதது என்று அர்த்தமாகும். அதே வசனத்தில் ‘ம்’ என்ற மெய்யெழுத்தைச் சேர்த்து இந்த உணவை நாயும் சாப்பிடாது என்று சொன்னால் அந்த உணவு அவ்வளவு இழிந்தது என்று அர்த்தமாகும். இப்படிப் போடப்படுகிற ’ம்’ எனும் மெய்யெழுத்துக்கு இழிவுச் சிறப்பு உம்மை என்று பெயராம்.

எங்கள் வீட்டு விருந்திற்கு வள்ளுவர் வந்தார் என்றால் வந்த விருந்தினர்களில் வள்ளுவர் ஒருவர் என்பது அர்த்தமாகும். அதே வசனத்தில் ‘ம்’ என்ற மெய்யெழுத்தைச் சேர்த்து எங்கள் வீட்டு விருந்திற்கு வள்ளுவரும் வந்தார் என்றெழுதினால் அது வந்தவர்களில் வள்ளுவரின் தனித்த உயர்வை நமக்கு எடுத்துக் காட்டும். இந்த ‘ம்’ என்ற எழுத்திற்கு உயர்வுச் சிறப்பு உம்மை என்று பெயராம்.

பரீட்சை முடிவறிந்து வீட்டிற்கு வரும் மகனிடம் அம் முடிவு பற்றித் தந்தை கேட்க, அவன் ‘பக்கத்து வீட்டு சுரேஷ் பெயிலாகிவிட்டான்’ என்பானாகில், அதற்குப் பக்கத்துவீட்டு சுரேஷ் பெயிலாகிவிட்டான் என்பது மட்டுமே அர்த்தமாகும். அதே வசனத்தில் அவன் அதே வசனத்தில் ‘ம்’ என்ற மெய்யெழுத்தைச் சேர்த்து ‘பக்கத்துவீட்டு சுரேஷும் பெயிலாகிவிட்டான்’ என்றானாகில் அந்த வசனத்திற்கு சுரேஷும் பெயிலாகிவிட்டான், நானும் பெயிலாகிவிட்டேன் என்பது அர்த்தமாகும். இந்த ‘ம்’ என்ற எழுத்திற்கு இறந்தது தழீஇய எச்ச உம்மை என்று பெயராம்.

‘விண்ணன், கந்தன், பொன்னன் சினிமா சென்றனர்’ என்றால், அம் மூவரும் சினிமா சென்ற செய்தி மட்டுமே பதிவாகும். அதே வசனத்தில் ‘ம்’ என்ற மெய்யெழுத்தைச் சேர்த்து ‘விண்ணனும், கந்தனும், பொன்னனும் சினிமா சென்றார்கள்’ என்றால் அம் மூவரும் ஒன்று சேர்ந்து சினிமா சென்ற உண்மை தெளிவாகும். இந்த ம் என்ற எழுத்திற்கு எண் உம்மை என்று பெயராம்.

தமிழ் இலக்கணத்தில் இப்படி மொழி நுட்பங்கள் பல எடுத்துக் காட்டப்படுகின்றன. சரியான முறையில் தமிழ் இலக்கணத்தைப் படிக்கவில்லை என்ற கவலை என் மனதில் ஆழப் பதிந்திருக்கிறது. மொழி ஆற்றல் உள்ள இன்றைய இளையோரேனும் வாய்ப்பிருக்கிற நேரத்தில் உங்கள் தாய்மொழியின் சிறப்பினைக் கற்கத் தவறாதீர்கள்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ ஒரு ’ம்’க்குள்ள இத்தனை ‘ம்’ஆ? தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா…!**

**3. கேள்வி:-** இரும்பு மனிதராய் வர்ணிக்கப்பட்ட பாரதப் பிரதமர் மோடியை விவசாயிகள் போராட்டம் மண்டியிடச் செய்து மன்னிப்புக் கேட்க வைத்து விட்டதே?

**பதில் :-** கொண்டு வந்த புதிய சட்டங்கள் மூன்றினையும் விவசாயிகளின் போராட்டத்திற்கு அடிபணிந்து மீளப் பெற்றுக்கொண்டதோடல்லாமல், விவசாயிகளிடம் நடந்த தவறுகளுக்காக மோடி மன்னிப்பும் கோரியிருக்கிறார். அவர் திருக்குறளைப் படிக்கிறாரோ, இல்லையோ ஆனால் திருக்குறளின்படி நடக்கிறார் என்பது மட்டும் தெளிவாகியிருக்கிறது.

இதற்கும் திருக்குறளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பீர்கள்? நிர்வாகம் பற்றிப் பேசுகிற வள்ளுவர், தம்முடைய பொருள்பாலில் ஒரு தலைவனிடம் இருக்கக்கூடிய குற்றங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார்.

செருக்கு, கோபம், காமம், உலோபம், மாண்பிறந்த மானம், அளவிறந்த உவகை என்பவையே அவர் சொல்லும் குற்றங்களாம். இக் குற்றங்கள் பற்றிப் பரிமேலழகர் எனும் உரையாசிரியர் விரிவாய் விவரிக்கிறார். அவற்றையெல்லாம் இங்கு முழுமையாய்ச் சொல்வதானால் விடை நீண்டுவிடும். அதனால் இந்த கேள்விக்குரிய ஒன்றை மட்டும் சற்று விரித்துச் சொல்கிறேன்.

மானம் அரசருக்குக் குற்றமாகுமா எனும் கேள்வியை எழுப்பி இங்கே சொல்லப்பட்டது மானமல்ல, மாண்பிறந்த மானம் என்று சொல்லும் பரிமேலழகர், மாண்பிறந்த மானம் என்றால் என்ன என்று விளக்கம் சொல்கிறார். உயர்ந்தோரைப் பணியாமையும், முடிக்க முடியாத செயலாயினும் அதனை முடித்தே விடுவேன் என்று நினைதலுமே மாண்பிறந்த மானமாம் என்கிறார் அவர்.



ஒரு தலைவன் ஒரு முடிவினை அறிவித்தபின், அது தவறென்று உணர்ந்தால், மானம் பாராமல் அதிலிருந்து பின் வாங்கவேண்டும். இது தனிமனித வாழ்வுக்கும் பொருந்தும். தனிமனிதன் பிழையான முடிவெடுத்துப் பின்வாங்க மறுப்பானானால், அதனால் அவனும் அவன் குடும்பமும் அழியும். ஒரு தலைவன் பிழையான முடிவினையெடுத்துப் பின்வாங்க மறுப்பானானால் அவனோடு அவன் தேசமும் அழியும். அதனால்த்தான் மாண்பிறந்த மானத்தைக் குற்றம் என்கிறார்கள்.

அவர்களது கருத்து உண்மை என்பதற்கு, இன்று நம் நாட்டில் நடக்கும் அரசியலே சான்றாம். மோடியின் முடிவிற்கு, வர இருக்கிற மாநிலத் தேர்தல்கள்தான் காரணம் என்கிறார்கள் சிலர். எது எப்படியோ? பிழை என்று தெரிந்ததும் பின்வாங்கியதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளிடம் மன்னிப்புக்கோரிய பெருந்தன்மையிலும் மோடி வள்ளுவர் வழி நடந்து காட்டியிருக்கிறார். இதனால் மோடியின் பெருமை உயர்ந்திருக்கிறதே தவிர தாழவில்லை என்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ∗ மோடி குறள் நெறியில் வருவாரோடி? (வருவார் ஓடி!)**

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை விசேட கூட்டத்தில் குழப்ப நிலை




இலங்கையின் இறையாண்மையை மீறமாட்டோம் என உறுதி எடுத்துவிட்டு அதை மறந்துதத்தமது இஷ்டங்களுக்கு செயற்படுவதால்தான் குழப்பங்கள் ஏற்படுகின்றன என வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரது வீடுகளுக்கும் வர்த்தமானியை அனுப்புவதாகவும், அதை கற்று தெளிந்துவிட்டு அடுத்துவரும் சபை அமர்வுகளில் அதற்கேற்ற முறையில் நடந்துகொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த சபை அமர்வு எதற்காக இடை நடுவே ஒத்திவைக்கப்பட்டது என விளக்கம் தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் தவிசாளரிடம் கோரியிருந்த நிலையில் சபையில் உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன. இந்நிலையிலேயே தவிசாளர் இவ்வாறு தெரிவித்திருந்தார். முன்பதாக கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற அமர்வின் போது ஒரு பகுதி உறுப்பினர்களால் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும் அன்றைய சபையின் அமர்வை உபதவிசாளர் மேற்கொண்டிருந்த நிலையில் உள்ளூராட்சிமன்ற சட்ட வரையறைக்கு அமைவாக அவர் அதை ஏற்றுக்கொள்ளாத நிலையில் குறித்த சபையின் அமர்வை விட்டுபல உறுப்பினர்கள் வெளியேறி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆனாலும் சபையில் சில உறுப்பினர்கள் இருந்துள்ளனர். சபையை முன்கொண்டு செல்ல கோரம் இல்லாமையால் குறித்த உறுப்பினர்கள் கூட்டத்தைத் தொடர்ந்தும் நடத்திச்செல்ல முடியாது என கூறி ஒத்திவைக்க உபதவிசாளரிடம் கோரியுள்ளனர்.

இதனால் உப தவிசாளர் சபையை வியாழக்கிழமை வரை ஒத்திவைத்திருந்தார்.

ஆனாலும் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டவரைமுறைகளுக்கு அமைய குறித்த போராட்டத்தை நடத்த அங்கீகாரம் இன்றி உறுப்பினர்கள் சென்றதால் தான் அந்த கூட்டம் ஒத்திவைக்க காரணமானது என்றும் இது எவ்வகையில் நியாயமானது என்று சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு விளக்கமளிக்குமாறும் உறுப்பினரால் தவிசாளரிடம் கோரப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டம் உறுப்பினர்களின் விருப்புகளுக்கு அமைய நடைபெற்றதென்றும், ஆனாலும் சபையில் அதை தீர்மானமாக எடுக்காது சென்றமை சபையின் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு அன்று தலைமை வகித்த உபதவிசாளருக்கு தடையாக இருந்தன எனவும் தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குழப்பங்கள் ஏற்படாதிருப்பதற்காக அவர் சபையை ஒத்திவைத்திருந்தார் எனவும் தெரிவித்தமையுடன் சபையின் உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள் அந்த சத்தியப் பிரமாணத்தை தற்போது மறந்துவிட்டார்கள் என்றும் அதை அவர்கள் மீண்டும் நினைவூட்டிக் கொள்வதற்காக அந்த வர்த்தமானி அறிவிப்பை பிரதியெடுத்து உறப்பினர்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, வலி.மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குள் இருக்கும் மயானங்களை எல்லை நிர்ணயம் செய்த பின்னரே அபிவிருத்திகள் செய்ய வேண்டும். அவ்வாறு எல்லை நிர்ணயம் இல்லாத மயானங்களுக்கு அபிவிருத்திகளை முன்னெடுப்பதால் நிலையான அடைவுமட்டத்தை எட்ட முடியாது எனவும் சிவகுரு பாலகிருஸ்ணன் வலியுறுத்தியிருந்தார்.

இதற்கான மயான அபிவிருத்தி சபையை கட்டமைத்து உடலங்களை தகனமோ அல்லது அடக்கமோ செய்ய அறவீடாக 1, 000 ரூபா நிதியையும் வரையறை செய்து அந்த நிதியைக் கொண்டே மயானங்களின் தூய்மையை முன்னெடுக்க முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. எல்லை வரையறையை துறைசார் தரப்பினருக்கு வலியுறுத்தி விரைவில் தீர்வைக் காண முயற்சிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதுவேளை சபையின் ஆளுகைக்குள் 18 மயானங்கள் இருக்கின்ற போதும் ஒரு சில மயானங்களைத் தவிர அதிகமானவை எல்லை வரையறை செய்யப்படாத நிலையிலேயே உள்ளன என்றும் இதனால் அவை அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டுமே தவிர ஏற்கனவே சேவைகள் முன்னெடுக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்தும் முன்னெடுப்பதால் பிரதேசத்தின் அபிவிருத்தி நிறைவு பெறாது என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனிடையே கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையை ஏற்படுத்துவது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் துவாரகா ஜெயகாந்தனால் முன்மொழிவொன்றும் சபையில் கொண்டுவரப்பட்டது.

குறித்த பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அது தொடர்பில் முதற்கட்டமாக அறிவிப்புகளை விடுப்பதென்றும் அதன்பின்னர் அதற்கான குழு ஒன்றை அமைத்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் புதிய ஆண்டின் முதலாவது கூட்டத்தினத்தன்று முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அடையாள போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவும் சபை ஏகமனதாக தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபா உயிருடனிருந்தால் வட–கிழக்கை வழங்கிவிட்டு அதற்கு பதிலாக டொலர்களை அரசு கோரியிருக்கும்!

### விஜித் விஜயமுனி சொய்சா சாட்டை



பிரபாகரன் இப்போது உயிருடன் இருந்திருந்தால் அரசாங்கம் அவரிடம் வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கையளித்துவிட்டு அதற்குப் பதிலாக டொலர்களை வழங்குமாறு கோரியிருக்கும் என முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான விஜித் விஜயமுனி சொய்சா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தற்போது கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகிய இரு அமெரிக்கர்களும் இணைந்துதான் நாட்டை நிர்வகிக்கின்றார்கள். மாறாக பிரதமரிடம் பெருமளவிற்கு அதிகாரங்கள் இருப்பதுபோல் தெரியவில்லை. அதனால்தான் அவர் திருப்பதிக்குச் சென்று வந்தாரோ தெரியவில்லை.

இப்போது நாடளாவிய ரீதியில் பெறுமதிவாய்ந்த பல்வேறு இடங்களும் சொத்துக்களும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையுடன் கொழும்பில் முக்கியமான 19 இடங்களை விற்பனை செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்பின்னர் ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை மற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்றுமே நாட்டில் எஞ்சியிருக்கும்.

இதேவேளை பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. பால்மா மாத்திரமன்றி அனைத்து அத்தியாவசியப் பொருள்களினதும் விலைகள் பெருமளவால் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றில் பலவற்றுக்கு சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

முன்னர் வெளிநாடுகளால் வழங்கப்படும் நிதியுதவிகள், பாரிய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி ஆகியவற்றிலேயே மோசடி செய்தார்கள். எனினும் தற்போது அவை இல்லாத காரணத்தால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய மக்களின் வயிற்றில் அடித்து, அதனூடாகவே அவர்கள் சம்பாதிக்கின்றார்கள்.

சிறுநீரக நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக இரசாயன உர இறக்குமதியை நிறுத்துவதாகக் கூறினார்கள். ஆனால் இப்போது உண்பதற்கு உணவின்றி உயிரிழக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் இன்னும் இருவருடங்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பிலிருந்தால், மக் களின் குருதியை எடுத்து விற் பனை செய்வதற்குக்கூட அது தயங்காது. ஆகவே, இந்த அரசாங்கத் தைப் பதவி கவிழ்ப்பதற்கு நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டிய அவசி யம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் இராணுவத் தலையீடும் அதிகரித்துள்ளது. எனவே, இவற்றை சீர்செய்வதுடன் தேர்தல்முறை மாற்றத்துடன் தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டும். – என்றார்.

## நீர்வீழ்ச்சியில் காணாமல் போன மூவரில் 16 வயது சிறுமி சடலமாக நேற்று மீட்பு!

ஹங்வெல்ல – தும்மோதர குமாரி எல்ல நீர்வீழ்ச்சியில் நீரில் மூழ்கி காணாமல் போன மூவரில் 16 வயது சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவரது சடலம் தற்போது அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல, குமாரி எல்ல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற இரண்டு சிறுமிகளும் ஒரு யுவதியும் வியாழக்கிழமை காணாமல் போயிருந்தனர்.

14 மற்றும் 16 வயதுடைய இருசிறுமிகளும் 29 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 41 கோடி ரூபா வருமானத்தைப் பெற்றது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

*கடந்த சில மாதங்களில் சுமார் 41 கோடி ரூபாவை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை சேமித்துள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*கடந்த சில மாதங்களாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஊழியர்கள் உரிய கொடுப்பனவுகள், போக்குவரத்து செலவு மற்றும் மேலதிக வேலைநேர கொடுப்பனவு போன்றவற்றைத் தவிர்த்து சுயமாக செயற்பட்டு இந்த இலாபத்தைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் திட்டத்துக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஊழியர் சமூக திட்டத்துக்கு அமையவே இந்த இலாபம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைய, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் அங்குனுகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிதண்ணீர் திட்டங்களினூடாக பணத்தை மீதமாக்கக் கூடியதாய் உள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்துக்கு நிர்வாகசபை!

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூகநிலையத்துக்கான புதிய நிர்வாக சபை 2015 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 2 மணியளவில் யா/செங்குந்த இந்துக் கல் லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனின் தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட பொதுக்கூட்டத்தில் நூற்றுக்குமேற்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நிர்வாகசபையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக நிர்மலானந்தன், செயலாளராக ஸ்ரீசந்திரகுமார், பொருளாளராக சிவதர்சன், உப தலைவராக வேதகிரீஸ்வரன், உப செயலாளராக தர்சனன், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி இராஜபூங்குழலி, திருமதி எட்மன் யூடித், நாகேந்திரம், செந்தூரன், கஜநீதன், நந்தகுமார் ஆகியோரும் போசகர்களாக இ. ரவீந்திரன், நா.ரகுமார் ஆகி யோரும் கணக்காய்வாளராக வ.ஸ்ரீதரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# ஜனநாயகப் போராளி பேராயர் டெஸ்மன்ட் டுட்டு அட்டூழியங்களுக்கு எதிரான உலகின் முகவரி!

## இரங்கல் செய்தியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தெரிவிப்பு

மனித உரிமைகளுக்காகவும் உலக சமாதானத்துக்காகவும் தனது தள்ளாத வயதிலும் போராடி வந்த பேராயர் டெஸ்மன்ட் டுட்டுவின் மறைவு ஈழத் தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு ஆகும்.

தென்னாபிரிக்காவில் தனது கறுப்பு இனத்தவர்களுக்கு எதிரான வெள்ளை நிறவெறிக்கு எதிராக ஜனநாயக வழியில் போராடிவந்த டெஸ்மன்ட் டுட்டு மனித உரிமைகளின் ஒரு சர்வதேச அடையாளமாக விளங்கிவந்துள்ளார்.

தென்னாபிரிக்காவைத் தாண்டியும் பூமிப்பந்தில் எங்கெல்லாம் மனிதம் வதைபடுகின்றதோ அங்கெல்லாங்கூட அட்டூழியங்களுக்கு எதிரான ஓர் உலகின் முகவரியாகத் திகழ்ந்தார் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது.

பேராயர் டெஸ்மன்ட் டுட்டுவின் மறைவையொட்டி தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் விடுத்துள்ள இரங்கற் செய்தியிலேயெ இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இரங்கற் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு -

பேராயரான டெஸ்மன்ட் டுட்டு மனிதம் என்பது இனம், மதம், மொழி என்ற எல்லைகளைக் கடந்த ஓர் உயரிய மாண்பு என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். இதனால், இஸ்ரேலிய யூதர்களால் பலஸ்தீனியர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகளுக்கு எதிராகக் குரலெழுப்பி வந்தார். ஈராக் மீது பொய்க் காரணங்கள்கூறிப் போர் தொடுத்தார்கள் என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், முன்னாள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் இருவரையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு வலியுறுத்தி வந்தார்.

ஈழத்தமிழர்கள்மீது பௌத்த சிங்களப் பேரினவாதம் நிகழ்த்தியது யுத்தக் குற்றமல் அது இனப்படுகொலையே என்று சர்வதேச அரங்கில் உறுதிபடக்கூறி நின்றார். விடுதலைப் புலிகளை உலகம் பயங்கரவாதிகளாகச் சித்திரித்தபோது புலிகளைத் தமிழர்களது பிரதிநிதிகளாகக் கண்டார். ஆனால், வெள்ளையர்களின் கரங்களைப்பற்ற விழைந்த எமது தலைவர்களின் இராஜதந்திரம் துரதிரஷ்டவசமாக, ஈழத்தமிழர்களின்பால் இக் கறுப்பினப் போராளி பரிவுடன் நீட்டிய கரங்களை இறுகப் பற்றத்தவறி விட்டது.

உலக அமைதிக்கான குரலாக ஒலித்ததால் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்ட டெஸ்மன்ட் டுட்டு, தனது 90ஆவது வயதில், 26.12.2021 அன்று தனது குரலை நிரந்தரமாகவே நிறுத்திக்கொண்டார். உலகம் முழுவதிலுமிருந்து அவரை அஞ்சலித்துக் கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுடன் ஈழத்தமிழ் மக்களின் சார்பில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இணைந்து தனது அஞ்சலியைச் சிரம் தாழ்த்தித்தெரிவித்துக்கொள்கிறது. - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியத் தூதரகத்தில் பணியாற்றும் இலங்கைப் பிரஜைகள் கௌரவிக்கப்பட்டனர்!

இந்திய தூதரகத்தில் பணியாற்றிவரும் இலங்கைப் பிரஜைகள் பலரை, அவர்களுடைய அர்ப்பணிப்பு டனான நீண்டகால சேவையை அங்கீகரிக்கும் வகையில் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே தூதரகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விசேட நிகழ்வொன்றில் கௌரவித்தார்.

30 வருடங்களுக்கும் அதிக காலமாக சேவையாற்றி வரும் மாலா கமகே மற்றும் நெய்ல் ஜோசெப் ரெஜிஸ் ஆகிய இருவருக்கும் இந்தியாவுக்கான இரு வழி விமான டிக்கெட்டுக்களும் இந்திய பயணத்துக்கான விசேட பணக்கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் ஷிரானி ஸ்ரீதரன், சுஜாதா ஹெட்டியாராச்சி, நிரஞ்சலா மனோரி ஜோசெப் மற்றும் லக்ஷி சமரவிக்கிரம ஆகியோருக்கு அண்மையில் பதவி உயர்வும் வழங்கப்பட்டது.

இந்தியத் தூதரகத்தில் அதி சிறந்த சேவையை வழங்கி வருகின்றமைக்காக இலங்கையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உயர் ஸ்தானிகர் நன்றியைத் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையில் அபிவிருத்தி ஒத்துழைப்பு, பயணங்கள், வர்த்தகம் மற்றும் வியாபாரம் போன்ற மக்களுடன் நேரடியான தொடர்பைக்கொண்டுள்ள விடயங்களில் இந்திய இலங்கை உறவுகளை வலுவாக்கும் நோக்கத்துக்கு தூதரகத்திற்கான அவர்களின் பங்களிப்பு ஆதரவாக அமைந்தது என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

உயர் ஸ்தானிகராலய அலுவலர்களில் கிட்டத்தட்ட 50 வீதமானவர்கள் இலங்கைப் பிரஜைகளாக உள்ளனர். இதேபோல அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் அலுவலகங்களிலும் கண்டியில் உள்ள இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்திலும் கணிசமான அளவிலான அலுவலர்கள் உள்ளூரிலிருந்து பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் பல்வேறு சமூகங்கள், மொழிகள், கலாசாரப் பின்னணிகளைச் சார்ந்தவர்களாக அவர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# செட்டிகுளத்தில் சிறப்பாக இடம்பெற்ற கலை, கலாசாரப் பாரம்பரிய நிகழ்வுகள்

செட்டிகுளத்தில் கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டு ஊர்வலமும், தெய்வீக கிராம நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பெரியகட்டு, கணேசபுரம், புதுக் குடியேற்ற திட்டப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமரும், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ.ராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டு ஊர்வலம் நந்திக் கொடிகளுடன் கணேசபுரம் சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் வரை இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கோமாதா பூஜை, மரநடுகை, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் என கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன. அத்துடன், சைவ சமயத்தின் சிறப்புக்களையும், அதன் மேன்மையையும் வெளிப்படுத்தும் வகையில்' குறித்த நிகழ்வுகள் அமைந்திருந்தன.

# இளம் லியோ தலைவர்கள் நால்வருக்குக் கௌரவிப்பு

## பதக்கம் வழங்கினார் பிரதமர் மஹிந்த



உலகின் மிகவும் திறமையான இளம் தலைவர்களுக்காக 'சர்வதேச லயன்ஸ் கழக தலைவரினால் வழங்கப்படும் உயர் தலைமைத்துவ விருது' பெற்ற லியோ தலைவர்கள் நால்வருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் வைத்து அப் பதக்கங்களை அணிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதி தலைமை மாணவத் தலைவர் மற்றும் றோயல் கல்லூரியின் லியோ கழகத்தின் பினுஜ அமரநாயக்க, கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் பிரதி தலைமை மாணவத் தலைவர் மற்றும் லியோ கழகத்தின் முன்னாள் தலைவர் தரிந்து ரணவீர, கொழும்பு ஆனந்த கல்லூரியின் லியோ கழகத்தின் முன்னாள் தலைவர் சுனெர லெனரோல் மற்றும் ஹொரய்சன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவ அணித் தலைவர் மற்றும் கொழும்பு நைட்ஸ் லியோ கழகத்தின் முன்னாள் தலைவர் இந்துனில் உதார பலிஹவதன ஆகியோர் இவ்வாறு பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் செயற்பாட்டிலுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமான சர்வதேச லயன்ஸ் கழகத்தால் உலகில் சிறந்த திறமையை வெளிப்படுத்தும் இளம் தலைவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

வாழ்நாளில் ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் இந்தப் பதக்கம், ஒரு வருடம் என்ற குறுகிய காலத்தில் நான்கு இலங்கையர்களுக்கும் கிடைத்தமை விசேட அம்சமாகும்.

றோயல் கல்லூரியின் லியோ கழகத்தால் வெளியிடப்பட்ட லியோ சஞ்சிகை இதன்போது கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதி தலைமை மாணவத் தலைவர் மற்றும் றோயல் கல்லூரியின் லியோ கழகத்தின் பினுஜ அமரநாயக்கவால் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

உலகின் முன்னிலையில் இலங்கைக்கு பெற்றுக்கொடுத்த புகழை பாராட்டிய பிரதமர், பதக்கம் வென்ற லியோ தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் லியோ கழகத்தின் ஆலோசகர் லசந்த குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பு அதிகரிப்புக்கு எவ்வாறு பணம் வந்தது!

## ஹர்ஷடி சில்வா கேள்வி

இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பு அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு டொலர் எந்த அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.

மத்திய வங்கியின் கையிருப்பு 310 கோடி டொலர்களாக உயர்வடைந்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அறிவித்துள்ளார்.

அப்படியாயின் அந்த நிதி எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றவகையில் எமக்குத் தெரியப்படுத்த அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால், இந்த பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்ற விடயத்தை மறைப்பதற்கு முயற்சிக்கின்றனர். எதற்காக மறைக்க வேண்டும் எனக் கேட்கின்றேன். உண்மையில் மத்திய வங்கி தெரிவிப்பதுபோல் பணம் கிடைத்திருந்தால் அதனை எங்கிருந்து கிடைக்கப்பெற்றது என்பதை பகிரங்கமாகத் தெரிவிக்க முடியும்.

வருடத்தின் இறுதியில் இருப்பதால், மத்திய வங்கி ஆளுநர் என்றவகையில் எம்மிடம் எந்தளவு பணம் இருக்கின்றது என்பதை காண்பிப்பதற்கே அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்றே நினைக்கின்றேன்.

உண்மையில் எமது கையிருப்பு அதிகரித்திருந்தால், துறைமுகத்தில் தேங்கிக்கொண்டிருக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 500 கொள்கலன்கள் விடுவிக்கப்படவேண்டும். ரூபாவின்பெறுமதி அதிகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும். அவ்வாறு இடம்பெற்றால், மத்திய வங்கி தெரிவிப்பதுபோல் டொலர் கிடைத்திருக்கின்றதை ஏற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் கூறினார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 238

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**611.இவ்வளவு வருடங்களின் பின் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியாவை அணுகுவதில் வெற்றி - தோல்வி யாருக்கு?**

இந்த இடைக்காலத்தில் இந்தக் கட்சிகள் யாவும் சேர்ந்து சமர்ப்பணம் தருவது தமிழ் மக்களுக்கு ஒரு வெற்றிதான். அதன் பெறு பேறுகளை சில மாதங்களில் அறிந்து கொள்ளலாம் – அது கொடுபட்டால் தான். ஆரவாரமாக 29 ஆம் திகதி அது கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இழுபறியறியிலேயே இப்பொழுது முதலாம் திகதிக்கு (இன்றைய தினத்துக்கு) பின்போடப்பட்டுள்ளது. இந்த அப்பளம் அடுப்பில் பொரிவதால் பாரதப் பிரதமர் மோடியுடனான சந்திப்புப் பற்றி பேச்சில்லை. சமர்ப்பணம் கொடுத்தால் நடக்கும், இல்லாவிட்டால் இல்லை என்ற கதையா என்பதிலும் விளக்கம் இல்லை.

செல்வம் தரப்பு முன்னெடுத்த 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துங்கள் என்ற சமர்ப்பணமும், அது இந்தியாவால் எல்லாத் தரப்புக்களும் இணைந்து தரப்பட்டால் பரிசீலிக்கலாம் எனக் கேட்கப்பட்டது என்ற முகவுரைகள் இப்பொழுது சில தரப்புக்களால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவே 13 ஆம் திருத்தத்தை மனித உரிமைகள் மன்றத்தின் தீர்மானத்தில் இணைத்து ஒரு நிரந்தர சமாதானத்துக்கு அதனை அமுல் படுத்துவதற்கு வழி திறக்கும் என சர்வதேச நாடுகளையும் அதற்கு அனுசரணையாகச் சேர்த்துள்ளது. ஆகவே இந்தியத் தரப்பு செல்வத்திடம் அப்படியான சமர்ப்பணத்தைக் கேட்டார்களோ, இல்லையோ இந்தியாவின் நோக்கத்திற்கு ஏற்ப, இதனை சமர்ப்பித்து, 'ஒரு நாடு; ஒரு சட்டம்' என்ற



அடிப்படையில் புதிய அரசியல் யாப்பு உருவாகுமுன் இந்தியாவின் ஆதரவைப் பெற்று, அவர்களைத் தலையீடு செய்ய வைப்பதில் அக்கறை காட்டப்பட்டுள்ளது. பின்னர் தமிழரசு கட்சியையும் அதில் இணைத்து இந்தியாவுக்குச் சமர்ப்பணம் செய்ய ஒத்துக்கொள்ள வைத்தமை அவர் தரப்புக்கு வெற்றிதான்.

செல்வம் தரப்பு முன்னெடுத்து, இந்தியா அமுல்படுத்த விரும்பும் 13 ஆம் திருத்தம் இன்றுள்ள நிலையில் எது? பெயரளவில் எவ்வளவோ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்ட 13 ஆம் திருத்தம் எது வித குறைபாடுகளும் களையப்படாமல், அதிலிருந்து மீளப்பட்ட அதிகாரங்கள் திருப்பித் தரப்படாமல் அல்லது இரு



மாகாணங்களினது இணைப்பு துண்டிக்கப்பட்டு, சோலைமலையின் வழக்கில் மாகாண சபைக்குக் காணிகளின் மேல் அதிகாரம் இல்லை, எந்தப் பகுதியிலும் ஓர் இன மக்களும் பெரும்பான்மையான வளங்களில் (காணி உட்பட) தங்களுக்கு முன்னுரித்து உண்டு எனக் கோர முடியாது என விளக்கப்பட்டவை எல்லாவற்றையும் உள்வாங்கி, இன்று கோதாகியிருக்கும் 13 ஆம் திருத்தத்தைத்தான் அமுல்படுத்துவார்களா என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

வடக்கும், கிழக்கும் இணைந்த மொழிவாரியான பிரதேசமாக அமுல்படுத்தப்படும் என்பதும் வெளிப்படையான, அர்த்தபுஷ்டியான உறுதி மொழிகளில் இருக்க வேண்டும். பின்னர் 'இன்றைய நிலையில் இருப்பதைத்தானோ தர முடியும்' - என்ற பேச்சுக்கு இடம் வைத்தல் கூடாது.

தமிழரசுக் கட்சியின் அணுகுமுறையைப் பார்க்கும் போது தமிழரின் முன்னெடுப்புகளைப் பொறுத்த மட்டில் அவர்கள்தான் தேசியப் பரப்பில் கட்சிகளிடையே ஆளுமையுள்ளவர்களாக விளங்குகிறார்கள். ஆகவே சமர்ப்பணம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என் மேல் தரப்புக்களையும் அழைத்து, அவர்கள் இல்லாவிட்டால் ஒற்றுமையான சமர்ப்பணம் ஒன்றில்லை என்பதை வெளிப்படையாக் கியதில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனாலும், இரண்டு பகுதிகளாலும் தமிழ் மக்கள் முடிவில் வெற்றி பெற்றவர்களாகத் தோன்றவில்லை.

ஆகவே தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குப் பாரிய பொறுப்புணர்வுகளும் கடமைபாடுகளும் உண்டு. ஆனால் தமிழரசு நடக்கும் எண்ணப்பாங்கில் அவர்கள் தமிழ் பிரதேசங்கள் அங்கு தமிழ் மக்களின் பெரும்பாண்மை தொடர வேண்டும் என்ற அபிலாஷைகளை விட்டு விலகுகிறார்களா என்ற சந்தேகங்களும் ஆதங்கங்களும் தமிழ் மக்களிடையே நிலத்திலும் புலத்திலும் பல தரப்புகளிடையே எழுகின்றன.

**612.ஏன் அந்த சந்தேகங்கள் எழுகின்றன?**

அவர்கள் ஒற்றையாட்சி எனும் சொல்லோ அல்லது சமஷ்டி என்ற சொல்லோ இல்லாமல், அதிகூடிய, உறுதியான, மத்திய அரசினால் மீளப்பெற முடியாத அதிகாரப் பகிர்வு புதிய அரசியல் சாசனத்தின் மூலம் பெறப்பட வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் இருந்தால், இது நல்லாட்சி காலத்தில் எதிர்பார்க்கப்பட்டவை. இவை எல்லாம் ராஜபக்ஷக்களின் முயற்சிகளால் முறியடிக்கப்பட்டு இன்று 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று ஜனாதிபதிக்கு 20 ஆம் திருத்த அதிகாரங்களுடன் அரசுத் தலைவராகப் பதவி வகிக்கின்றார்.

அவர்கள் வெளிப்படையாகவே செய்யும் ஆக்கிரமிப்புக்களினால் புதிய அரசியல் சாசனம் பேசப்படும் கால நேரங்களிலேயே 'தமிழ் பிரதேசங்கள்' என்ற இன, மொழி பெரும்பான்மை கட்டமைப்பைத் தமிழர் தாயகத்தில் பாதுகாத்துக் கொள்ள முடியுமா, வரும் புதிய யாப்பு அவ்வாறான தன்மைகள் கொண்டதாக இருக்குமா என்பவற்றில் மக்களுக்கு நம்பிக்கைகள் குறைவாகவே உள்ளன. இவற்றை விளக்காது 'நாங்கள் பேசுகிறோம். தக்க நேரங்களில் தெரியப்படுத்துவோம்' என்பவை பின்னர் நல்லாட்சிக் காலம் போல் நடந்திருக்கும், நடக்கவில்லை என அணிலை ஏறவிட்டு பார்த்திருந்த நிலைக்கு தமிழ் மக்களைத் திரும்பவும் கொண்டுவரக் கூடாது.

"தமிழ் மக்களின் தமிழரசு கட்சி பதவிகளுக்காக விலகிப்போகிறவர்கள் அல்லர். அமிர்தலிங்கம் காலம் முதல் அவர்களுக்கு அமைச்சு பதவிகள் தருவதாக பல அரசுகள் உறுதியளித்திருந்தன. என்றாலும் அவை ஏற்கப்படவில்லை. எனவே இங்கு, கூச்சல் இடுகின்ற தம்பிமார்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். தமிழரசு கட்சி பதவிகளுக்கு விலைபோகிறவர்கள் அல்லர். விலைபோகமாட்டோம். எங்கள் மக்களை நாம் கடைசி வரையிலும் கைவிடமாட்டோம். நாங்கள் தந்தை செல்வாவின் வழி வந்தவர்கள். தந்தை செல்வாவுக்கு துரோகம் செய்யமாட்டோம்" என்றும் அந்தப் பேச்சில் குறிப்பிட்டார் சம்பந்தன்.

ஈரோஸின் பாலகுமார் ஒரு முறை குறிப்பிட்டதை மீண்டும் கூறுகின்றேன். "புலிகள் நடத்திய அரசியலால், அவர்களின் தலைவர்களை, போராளிகளைத் தான் மக்களுக்குத் தெரியும். கிளிநொச்சிக்கு உள்நாடி சென்று யாரிடமும், எவ்விடத்திலும் செல்வநாயகத்தை தெரியுமோ என்று இளைஞர்களிடம் கேட்டல் அவர்கள், 'எந்த செல்வநாயகம்? சைக்கிள் கடை செல்வநாயகத்தையா?' என்றுதான் கேட்பார்கள் என்றார் பாலகுமார்.

ஆகவே சம்பந்தன், செல்வநாயகத்தைத் துணைக்கு சேர்க்கும்போது, 30 வருடத்துக்கு மேலாக நடந்த ஓர் அர்ப்பணிப்பான போராட்டத்தையோ, அவர்களது தியாகங்களையோ, அவர்கள் இருந்தது, போராடியதையோ கணக்கெடுத்தவராகத் தெரியவில்லை.

அவைபோல்தான் பதவிகள் என்ற அரசியல் ராஜபக்ஷக்களால் அவர்கள் தரப்பிடையேயும் எதிர்த்தரப்புக்களிடையேயும் பணமாகவும், பண்டமாற்றாகவும், வாங்கி விற்கும் கட்டபொம்மன் சொன்ன



"கும்பனி வியாபாரமாக" நடக்கிறது. சீனா கால் பதிக்கவும், அதனை விலத்த இந்தியாவும் மேலைத்தேய நாடுகளும் செலவழிக்கும் தொகைகள் நல்லாட்சியைத் தக்க வைப்பதிலும் விழுத்துவதிலும் பேரம் போனவை. பரிமாறப்பட்டவை, நெல்லுக்கு, பாய்ந்த நீர் புல்லுக்கும் பாய்ந்தது என்பதை மக்கள் அறிந்தே இருந்தார்கள். சம்பந்தன் மறதிக்கு பெயர்போன தலைவர். போர் முடிந்த இந்த 12 வருடங்களும் முதல் வருடம் சொன்னதை மறந்து, பொங்கலுக்கு முன் தீர்வு, தீபாவளிக்கு முன் தீர்வு வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அமெரிக்காவில் பொங்குகிறார். அடுத்த பொங்கலும் கடந்து போகலாம் என்றுதான் எதிர்பார்க்கவேண்டும்.

(வளரும்)












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2022 இல் வெளியிடப்பெற்றது.